SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 1
August-2021, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2021, விலை ரூ.5/-





த்வாமேவாஹு: கதிசிதபரே த்வத்ப்ரியம் லோகநாதம்
கிம் தைரந்த: கலஹ மலிநை: கிஞ்சிதுத்தீர்ய மக்நை: |
த்வத்ஸம்ப்ரீத்யை விஹரதி ஹரௌ ஸம்முகீநாம ச்ருதீநாம்
பாவாருடௌ பகவதி யுவாம் தம்பதீ தைவதம் ந ||

– ஸ்ரீ ஸ்துதி



பீ$_4$ஷ்மத்$_3$ரோணப்ரமுக$_2$த:
ஸர்வேஷாம் ச மஹீக்ஷிதாம் |
உவாச பார்த$_2$ பச்யைதாந்
ஸமவேதாந் குரூநிதி ||

ஸ்ரீகிருஷ்ணர், பீஷ்மருக்கும் துரோணருக்கும் முன்பும் அனைத்து அரசர்களுக்கு முன்பாகவும் உயர்ந்த ரதத்தை கொண்டு நிறுத்தி, “பார்த்தனே! யுத்தத்திற்காக ஒருங்கே கூடியிருக்கும் இந்தக் கௌரவர்களைப் பார்” என்று கூறினார்.

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–25

ஸ்வதஸ்ஸித்தம் சுத்தஸ்ப்படிகமணி பூப்ருத் ப்ரதிபடம்
ஸுதா ஸத்ரீசீபிர் த்யுதிபிரவதாத த்ரிபுவநம் |
அநந்தைஸ் த்ரய்யந்தைர நுவிஹித ஹேஷா ஹலஹலம்
ஹதாசேஷாவத்யம் ஹயவதநமீடீமஹி மஹ: ||

தானே தோன்றியதாய் மாசற்ற படிக மணியாலாகிய மலையை யொத்ததாய், அமுதம் போன்ற ஒளிகளால் முவுலகையும் வெண்மையாக்குவதாய், அளவற்ற வேதாந்தங்களால் தொடர்ந்து ஒலிக்கப்பெற்ற “ஹலஹல” என்ற கனைகுரலையுடையதாய், எல்லாருடைய எல்லாத் தீங்கையும் ஒழிக்கவல்லதாய், குதிரை போன்ற திருமுகத்தையுடையதாயுள்ள ஒளி வடிவத்தை துதிக்கக் கடவோம்.

- ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம்





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943-ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.
2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.
3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.
4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.
5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.
6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.
8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.
9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.
10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.
11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-
2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

## ஆகஸ்ட் 2021

மலர் 01
இதழ் 01


## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாசுரத்தில் கண்ணன் வரலாறு<br>- முனைவர் பிரியா கிருஷ்ணன், சென்னை. | 7 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்<br>- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 11 |
| பெருமைக்குரிய கருடாழ்வார்<br>-திரு. டி.எம். இரத்தினவேல், ஈரோடு. | 12 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : சென்றான், கொன்றான், நின்றான்<br>- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 14 |
| ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : க்ருதஜ்ஞன்<br>- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை. | 18 |
| ஆன்மீகம் நிறைந்த ஆவணி மாதம்<br>- திரு. டி.ஆர். பரிமளரங்கன், திருவரங்கம். | 20 |
| பஞ்சாங்கமும் சூட்சம பொருளும் : நட்சத்திர யோகங்கள்<br>- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி. | 22 |
| ஸ்ரீமத் பகவத்கீதை - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 25 |
| வரலட்சுமி விரதம் - திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி, கேரளா. | 31 |
| கல்வி வரமருளும் ஸ்ரீஹயக்ரீவ பெருமாள்<br>- திரு. நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். | 34 |
| குணநல ஒழுக்கமே குமரன் வழிபாடு<br>- திரு. சிவ. சதீஸ்குமார், பொள்ளாச்சி. | 36 |
| பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள் : கோதா சதுச்லோகீ<br>- உ.வே. டாக்டர். அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை. | 38 |
| 108 திவ்யதேச வைபவம் : திருவனந்தபுரம்<br>- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 40 |
| கோமாதா நம் குலமாதா<br>- திரு. பி.தாமரை சிவராமன், திருவள்ளூர். | 42 |
| யோக சாஸ்திரம் : பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள்<br>- டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர். | 44 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்<br>- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 46 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : தசரதன் - திரு. சத்யதாரா, சென்னை. | 48 |
| நீதிக்கதைகள் : கர்ணன் செய்யாத தானம்<br>- திருமதி டி.ஆர். சோலையர்க்கரசி, கும்பகோணம். | 51 |
| சித்திரக்கதை : வெங்கமாம்பாவின் பக்தி | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : நவநீதகிருஷ்ணர் (உற்சவர்), திருமலை.

பின்னட்டை : ஸ்ரீஹயக்ரீவ ஸ்வாமி (சித்திரம்).


சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

உங்களுடன்...

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று



நம் பாரதத் திருநாட்டில் ஆலய வழிபாடு என்பது தொன்று தொட்டே இருந்து வந்திருக்கின்றது. இந்த உலகம் அனைத்தும் இறைவனின் வடிவமே என்பதனை உணரும் திறனுடைய ஞானிகளால்தான் இறைவனைப் பற்ற முடியும்.

சாதாரண மக்கள் கடவுளை நினைக்க, பக்தி செய்ய ஆலய வழிபாடு மிகவும் அவசியமாகிறது. இதன் உண்மையை அறிந்த ரிஷிகளின் சொல் கேட்டு அன்றைய அரசர்களும் ஆலயத்தை நிர்மாணித்து அனைவரின் வழிபாட்டிற்கும் வழி வகை செய்தனர். ஆலயங்களின் பெருமையுணர்ந்த ஆழ்வார்களும், நாயன்மார்களும் மற்றும் ஆன்மீக வாதிகளும் ஆலயத்தைப் பற்றியும் அங்கு கொலுவீற்றிருக்கும் இறைவனின் சிறப்பு, தீர்த்தத்தின் சிறப்பு, தலப்பெருமை ஆகியவற்றை தம் பாடல்களால் போற்றி அடுத்து வரும் சந்ததியினரும் பயன் பெறும் வகையில் நூலாகப் படைத்துள்ளனர். ஆலயம் என்பதில் “ஆ” என்றால் ஆன்மாக்கள். “லயம்” என்றால் ஒருமைப்படுதலாகும். மனம் சோர்வு அடையும் போது மனதிற்கு புத்துணர்வினை வழங்கும் இடமே ஆலயமாகும். இது குறித்தே “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்கிறார் ஔவை பிராட்டி.

அன்றைய காலகட்டத்தில் ஆலயங்கள் எல்லா அம்சங்களையும் தன்னுள் அடக்கி சமுதாய வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்ந்தன. ஆலயங்கள் ஊர் பொதுமன்றங்களாகவும்; கல்வி நிலையங்களாகவும்; அறச்சாலைகளாகவும்; பிரார்த்தனைக் கூடங்களாகவும்; கலை இலக்கிய பண்பாட்டு மையங்களாகவும் இவற்றிற்கெல்லாம் மேலாக மனதையும் மற்றும் ஐம்புலன்களையும் ஒருமுகப்படுத்தும் ஞான இல்லங்களாகவும் திகழ்ந்து வருக்கின்றன. மேலும், ஆலயங்கள் கலை, இலக்கிய விஞ்ஞான அடிப்படையில் அனைவரும் மெய் ஞானம் பெறக்கூடிய அளவில் உருவாக்கப்பட்ட புனித இடங்களுமாகும்.

சமூக ரீதியாக ஆலயம் என்பது கூடித் தொழும் இடம் என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு கூடித் தொழுவதினால் அனைவரும் சமமாக இறைவனைத் தொழும் ஒரு நெறிப்பாடு அமைகின்றது. இதுவே ஆன்மநேய ஒருமைபாட்டிற்கும் வழிவகுக்கிறது. ஆலயத்தின் இந்த சிறப்பு மிக்க பெருமைகளை உணர்ந்தால்தான் “கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்று கூறியதற்கான உண்மைதனை நாம் அறிய இயலும். இவ்வாறு பெருமை மிகுந்த ஆலயங்களில் இறைவனே சுயம்புவாக எழுந்தருளிய ஆலயங்களும் உள்ளன. உலகில் சில ஆலயங்கள் ரிஷிகளாலும், மாமன்னர்களாலும் மற்றும் சில ஆலயங்கள் மக்களாலும் கட்டப்பட்டவையாக உள்ளன.

இறைவன் தானே விருப்புற்று எழுந்தருளிய ஆலயங்கள் ஏழு என்பர். அந்த ஏழு ஆலயங்களில் ஒன்றுதான். கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கும் திருமலை ஆலயமாகும். இந்த திருமலை ஆலயத்திற்கு அன்றைய மாமன்னர்களாலும், இன்றைய பக்தர்களாலும் பல கைங்கர்யங்கள் செய்யப் பட்டு வருகின்றன. அந்த திருவேங்கடவனுக்கு இன்று திருமலை திருபப்தி தேவஸ்தானம் காஷ்மிர் முதல் கன்னியாகுமரி வரை ஆலயங்களை நிர்மாணித்து வருவது குறிப்பிடத்தக்கது. நமது ஆலயங்கள் புனிதமான கலாச் சாரம் மற்றும் சனாதன தர்மத்தை அடையாளப்படுத்துகின்றன. கலை வடிவங்களின் களஞ்சியமான ஆலயங்கள் அனைத்தும் மக்களின் செழிப்பு மற்றும் நல்வாழ்வுக்காக கட்டப்பட்டன. வேத கலாச்சாரத்தின் மையங்களான இந்த ஆலயங்களை பாதுகாப்பதும், புதுபிப்பதும் ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும்.. இந்த உயர்ந்த நோக்கத்தை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானம் “ஸ்ரீவேங்கடேஸ்வரா பாரம்பரிய பாதுகாப்பு அறக்கட்டளை”யைத் துவக்கியுள்ளது. இன்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆலயங்கள் பாழடைந்தும், சிதிலமடைந்தும் உள்ளன. இந்த பழமையான பாழடைந்த ஆலயங்களை புதுபிப்பதும் சீரமைப்பதும் நம் அனைவரின் தலையாய கடமையாகும்.

ஆலயங்களை காப்போம்! புனிதத்தை மீட்போம்!!

# ஆண்டாள் அருளிய திருப்பாவைப் பாசுரத்தில் கண்ணன் வரலாறு

உலகம் எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளை திருச்சொல்லாக்கி,

*"நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்*
*நாராயணா என்னும் நாமம்..!"*

என்ற திருவாக்கின்படி ஆண்டாள் நாச்சியார் மாதவன், கேசவன், பத்மநாபன், தாமோதரன் என்னும் பல திருநாமங்கள் கொண்ட திருமாலையே வாழ்நாள் முழுவதும் சிந்தையில் வைத்து ஸ்ரீரங்கநாதனின் திருவடி பற்றும் பேறு பெற்றவரானார். தான் பெற்ற பேற்றை இவ்வையகமும் பெற ஓதி உணர்ந்து உரைத்தனவே திருப்பாவை என்னும் முப்பது முத்தானத் திருப்பாசுரங்கள்.

**திருப்பாவையின் சிறப்பு :**

பாதகங்கள் தீர்க்கும், பரமனடி காட்டும், வேதம் அனைத்துக்கும் வித்தாகும் என்று போற்றப்படும் திருப்பாவையில், ஆண்டாள் நாச்சியார் எடுத்துரைக்கும் திருமாலின் சிறப்புகளையும், பண்டு தொட்டு நம்முடன் பயணிக்கும் புராணக்கதைகளையும் இணைத்து கையாண்டிருப்பது திருப்பாவையின் மேன்மையான சிறப்புகளுள் சிறப்பாகும். திருப்பாவையினை கற்றவர்கள் மீண்டும் மீண்டும் கற்றுணருமளவிற்கு அதன் அனுபவம் பரமானந்த நிலையினை உணரச் செய்யும் அருமருந்தாய் விளங்குவதாகும். அதுவே பரமனின் திருப்பாதம் அடையும் எளிய வழியாகும் எனப் போற்றலாம்.

**கண்ணனின் அறிமுகம் :**

*"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை*
*தூய பெருநீர் யமுனைத் துறைவனை*
*ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை*
*தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை*
*தூயோமாய் வந்து நாம் தூமலர்த் தூவித்தொழுது*
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க*
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய் "* –திருப்பாவை

திருப்பாவையின் ஐந்தாம் பாசுரத்தில் இடம்பெறும் கண்ணபிரான் யார் என்று அனைவரும் அறியும் வண்ணம் ஆண்டாள், கண்ணனை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். மாயன் என்ற பெயர் கொண்ட மாயக்காரன், வட மதுரையில், யமுனை



**முனைவர் பிரியா கிருஷ்ணன்,**
**சென்னை,7299587879**





ஆற்றின் புகழை நிலைக்கச் செய்தவன். தனது தாய் தேவகியின் பிள்ளைகளை அடுத்தடுத்து கொன்றுவந்த கம்சனை அழித்து, தனது தாயின் துயரைப் போக்கிய சிறப்புக்குரியவன். இதோடு பசுக்களைத் தீண்டி மாய்த்த காளிங்கனை அடக்கி நர்த்தனம் செய்தவன். தாய் யசோதையின் செல்லப் பிள்ளையானவன்.

இத்தகைய புகழை நிலைக்கச் செய்தவனாகிய கண்ணனை, யமுனைத் துறையின் நாயகனை மனம், வாக்கு, காயம் என்ற மூன்றின் தூய்மையோடு வணங்குவோர்க்கு அதுவரை செய்திருந்த பாவங்கள் கூட விலகி நல்லருள் கிட்டும் என்கின்றாள்.

உலகை ஆளும் கண்ணனுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இவ்வுலகில் பிறக்க என்ன தவம் செய்திருக்க வேண்டும் என்று தெரியுமா? தேவகியும் வசுதேவரும் செய்த புண்ணியம் என்ன எனத் தெரியுமா?

ஆம்... அதையும் தெரிந்து கொள்வதால் பகவான் தேர்ந்தெடுத்த தாய் தந்தையோர் எத்தகையர் என்பதை நம்மால் உணரமுடியும்.

**கம்சன் என்னும் அரக்கன் :**

கிருஷ்ணர் அவதரித்தபோது தேவகிக்கும் வசுதேவருக்கும் சாதாரண குழந்தையாக காட்சி அளிக்கவில்லை. நான்கு கரங்களையுடைய விஷ்ணு தரிசனத்தோடு காட்சியளித்தார். பின்னர் சாதாரண குழந்தையாக மாறி தன்னை நந்த மகாராஜாவும் தாய் யசோதையும் வசித்த வீட்டிற்கு எடுத்துச் செல்லும் படித் தன் தந்தையிடம் கூறுகின்றார்.

ஏனெனில் தேவகியின் சகோதரனான அரக்கன் கம்சனை அழிக்க எடுத்த அவதாரம் இது. தேவகியின் திருமணத்தில் இருந்துதான் இவை அனைத்தும் தொடங்கியது.

சூரசேன மன்னனின் மகனான வசுதேவர் தேவகியை மணம் செய்தவுடன் தன் புது மனைவி யுடன் தன் இல்லத்திற்குப் புறப்பட்டார்.

வேத நாகரிகத்தின்படி ஒரு பெண்ணுக்குத் திருமணமானவுடன் பெண்ணின் தமையன் அப்பெண் ணோடு கணவனின் வீடுவரை சென்று வருவது வழக் கம். உக்ரசேனனின் மகனான கம்சன் தன் சகோதரி தேவகியை மகிழ்விக்கும் பொருட்டு இரதத்தை தானே ஓட்டிச் சென்றான். அப்போது வானத்தில் தோன்றிய அசரீரி, கம்சா நீ ஒரு முட்டாள். உன் சகோ தரிக்கும் அவளின் கணவனுக்கும் நீ தேரோட்டிச் செல்கின்றாய். ஆனால் உன் தங்கையின் எட்டாவது குழந்தை உன்னைக் கொல்லும் என்பதை நீ அறிய மாட்டாய் என்றது,

உடனே தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்த கம்சன் தேவகியை கொல்ல முயற்சித்தான். ஆனால் வசுதேவர் அதனை தடுத்து விட்டார். மேலும், ஆபத்து எங்கள் சந்ததியினரால் மட்டுமே தவிர எங்களால் அல்ல. எனவே தங்களை விட்டுவிடும்படியும், குழந்தை பிறந்தால் உடனடியாக





அதனை கம்சனிடம் ஒப்படைப்பதாகவும் வசுதேவர் வாக்களித்தார்.

வசுதேவர் வார்த்தை மாறமாட்டார் என்று கம்சன் நன்கு அறிவான். மேலும், தேவகி அவனது அன்பு சகோதரி என்பதால் அவளை உயிருடன் விட கம்சன் சம்மதித்தான். இருப்பினும் அவர்களைச் சிறையில் அடைத்தான். சிறையில் அடைக்கப்பட்ட சில காலத் திற்குப் பிறகு தேவகிக்கு முதல் குழந்தை பிறந்தது. குழந்தை தனது தாயுடன் சிறிது நேரத்தை மகிழ்ச்சி யாகக் கழிக்கும் முன்னரே குழந்தை பிறந்த செய்தி கம்சனை சென்றடைந்தது.

ஆனால், அவர்கள் அதனை தடுக்கவில்லை. ஏனெனில் அவ்வாறுதான் முடிவு செய்யப்பட்டு இருந்தது. கம்சன் எட்டாவதாகப் பிறக்கும் குழந் தையை மட்டும்தான் கொல்ல நினைத்தான். ஏனெ னில் அவனால்தான் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அவன் அறிவான். ஆனால் அவனின் பாவங் களை அதிகரிப்பதற்காக கடவுள் ஒரு திட்டம் தீட்டி னார். அதன்படி கம்சனை குழப்ப, நாரதரை அனுப்பி வைத்தார். அப்போது தொடங்கிய கொலைகள் தொடர்ந்து நடந்தன.

தேவகிக்கு பிறந்த ஏழு குழந்தைகளை தொடர்ச்சியாக கம்சன் கொன்றான். ஏனெனில் கம்சன் நாரதரின் கருணையால் தன் முந்தைய பிறவியைப் பற்றி அறிந்து கொண்டான். முந்தைய பிறவியில் காலநேமி என்ற அசுரனாகப் பிறந்து விஷ்ணுவால் கொல்லப்பட்டதை அறிந்தான். கிருஷ்ணர் தன்னை முந்தைய பிறவியில் கொன் றதைப் போல் இந்த பிறவியிலும் கொல்வார் என்று பயந்தான். அதனால் தேவகிக்கு பிறக்கும் எல்லா குழந்தைகளையும் கொல்வதென தீர்மானித்திருந் தான். கிருஷ்ணரின் 7 மூத்த சகோதரர்கள் பூமியில் எந்த வாழ்க்கையும் இன்றி கொல்லப்பட்டனர்.

கிருஷ்ணரின் சகோதரர்களுக்கு இந்த நிலை ஏற்பட காரணம் அவர்களின் பூர்வ ஜென்ம கர்மா வாகும். அவர்களின் கர்மா காரணமாக அவர்கள் மனித பிறவியில் ஒரே தாயிற்கு குழந்தைகளாகப் பிறந்து, எந்த சுகத்தையும் அனுபவிக்காமல் இறக்க வேண்டும் என்பது. அதனால் ஏழு குழந்தைகளும் கொல்லப்பட்டன. எட்டாவது குழந்தையாக ஸ்ரீகிருஷ்ண பகவான் அவதரித்தார்.

தேவகி தனது எட்டாவது குழந்தை பாற்கடலில் பள்ளிக் கொண்டிருக்கும் நாராயணன் என்பதை அறிந்து மகிழ்ந்தாலும், குழந்தையின் பிறப்பை அறிந்து கம்சன் அடுத்து என்ன செய்வானோ என்ற அச்சத்தில் பகவானை பிரார்த்தனை செய்கின்றாள்.

தேவகியின் பிரார்த்தனையை செவியுற்ற பகவான், “என் அன்பார்ந்த அன்னையே, ஸ்வாயம் புவ மனுவின் காலத்தில் என் தந்தையான வசுதேவர் ஒரு பிரஜாபதியாக வாழ்ந்து வந்தார். அப்போது அவரது பெயர் ஸுதபா.நீ பிருச்னி என்ற பெயரில் அவருக்கு மனைவியாக இருந்தாய். அப்போது ஜனத்

தொகையை அதிகரிக்க விரும்பிய பிரம்மன் குழந்தைப் பெற்றுக் கொள்ளும்படி உன்னிடம் கூறினார்.

நீ புலன்களை அடக்கி விரதம் மேற்கொண்டிருந்ததால் நீயும் உன் கணவனும் மழை, காற்று, கடும் வெயில் போன்ற இயற்கைப் பருவ நிலைகளின் பாதிப்பிலிருந்து விடுபட்டிருந்தீர்கள். சமய நெறிகளை கடைபிடித்து வந்தீர்கள். இவ்வாறு உமது இதயத்தைப் பரிசுத்தமாய் வைத்திருந்து இயற்கையின் விளைவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தீர்கள். விரதங்களை அனுஷ்டித்த நீங்கள் மரங்களிலிருந்து கீழே விழுந்த இலைகளை மட்டும் உணவாகக் கொண்டிருந்தீர்கள்.

பின்னர் நிலையான மனதுடன் பாலுணர்வுகளை அடக்கி சில நேர்த்தியான கோரிக்கைகளை முன் வைத்து என்னை வணங்கினீர்கள். இருவரும் தேவர்களின் கணக்குப்படி 12,000 ஆண்டுகள் கடும் தவம் மேற்கொண்டீர்கள். அப்போது உங்கள் மனம் என்னிலேயே லயித்திருந்தது. எனக்குப் பக்தித் தொண்டாற்றி, உங்கள் மனதில் எப்போதும் என்னையே எண்ணிக் கொண்டிருந்ததால் உங்களிடம் நான் பிரசன்னமானேன். பாவமற்ற தாயே, உன் இதயம் எப்போதும் தூய்மையானது.

அப்போதும் நான் உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இதே உருவில் தோன்றி, வேண்டிய வரம் கேட்கும்படிச் சொன்னேன். நான் உன் மகனாகப் பிறக்க வேண்டுமென்று நீ வேண்டிக் கொண்டாய்.



முக்தியை வேண்டாமல், நான் உனது மகனாகப் பிறக்க வேண்டும் என்று வரம் கேட்டாய் என்று பகவான் பதில் உரைக்கின்றார். பகவான் பூவுலகில் அவதாரம் எடுக்க எண்ணியபோதே குறிப்பாக பிருச்னியையும், ஸுதபாவையும் தன் தாய் தந்தையராகத் தேர்ந்தெடுத்தார்.

தொடர்ந்து அவதாரங்கள் எடுக்கும் போதெல்லாம் இவர்களையே தன் தாய் தந்தையாகக் கொண்டார். பிருச்னியும் ஸுதபாவும் பகவானுக்கு தொண்டு புரிவதையே தவமாகக் கொண்டு இந்த பணியினை செய்து வந்தனர் என்று அறியும் போது பகவானின் கருணை உள்ளத்தை என்னவென்று புகழ்வது?

மேலும் பகவான் தேவகியிடம், பிருச்னை பெற்றெடுத்த முதல் குழந்தையின் பெயர் பிருக்னி கர்பா. அடுத்து கல்ப காலத்தில் நீங்கள் அதிதியாகவும் கச்யபராகவும் பிறந்தீர்கள். நான் உபேந்தரனாகப் பிறந்தேன். அப்போது என் உருவம் மிகவும் சிறியதாக இருந்தது. அதனால் என்னை வாமன தேவர் என்று அழைத்தார்கள். உங்களுக்கு மூன்று முறை மகனாகப் பிறப்பதாக நான் வரம் தந்திருந்தேன்.

இது மூன்றாவது முறை. கிருஷ்ணனாக பிறந்திருக்கின்றேன். புருஷோத்தமனாக நான் பிறப்பெடுத்துள்ளேன் என்பதை அறிவிக்கவே விஷ்ணுவாக உங்கள் முன் காட்சியளிக்கின்றேன். நான் சாதாரண குழந்தையாகப் பிறந்திருந்தால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். என் அருமை தாய் தந்தையரே, என்னை நீங்கள் பலமுறை மிகுந்த அன்போடு உங்கள் குழந்தையாக வளர்த்து இருக்கிறீர்கள்.

உங்கள் கடமையை செவ்வனே செய்யாததால் இம்முறை உங்களுக்கு முக்தி கொடுக்கின்றேன் என்று கூறி தன் உருவத்தை சாதாரண மானிட குழந்தையாக மாற்றுகிறார்.

இத்தகைய புருஷோத்தமன் தனக்கு பறை தருவான், தன்னையும் ஆட்கொள்வான் என்று ஆண்டாள் நம்பினாள். அந்த திருநாளும் நிகழ்ந்தது. ஆண்டாள் சிறு பிராயத்திலேயே இரு பெரும் இதிகாசங்களையும், ஸ்ரீமத் பாகவதத்தையும் கேட்டு கேட்டு மனதில் பதித்துக் கொண்டவள்.

கண்ணனை நினைத்து உருகி மணம் செய்து கொண்ட ராதையினைப் போல், தானும் மணம் செய்து கொண்டாள். அதனால் தனது முன்னோர்கள் மேற்கொண்ட பாவை நோன்பினை நோற்று, கண்ணன் புகழ் பாடி, பகவானை அடைந்து சூடிக் கொடுத்த சுடர்கொடியாளாக பகவானை மணந்தும், பார் போற்றும் ஆழ்வார்களில் ஒருவராக பரமன் புகழ் பாடி மானிடப் பிறவியின் பெருமை உணர்த்தியவளாக விளங்கினாள்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

*நின்ன தருசனக்கெ பந்தவ நல்லவோ!*
*புண்ய வந்த்ர சரண நோடலு நா பந்தெ!!*

உம் தரிசனத்திற்கு நான் வரவில்லை, புண்ணியம் செய்தவர்களான உம் பக்தர்களின் பாதங்களைக் காண வந்தேன். இங்கே புண்ணியம் செய்தவர்கள் என்றால் தரு (மரம்) மிருக உருவத்தில் உள்ள தேவதைகளைக் காண்பதற்காக வந்தேன் என்று மனம் கலங்கி கூறினார். நமக்கு கிடைக்கப் பெற வேண்டிய பொருள்கள் கிடைக்காதபோது மனம் வெறுப்பு அடையும். இது உண்மை. ஸ்ரீநிவாசர் சர்வோத்தமன், சர்வேஸ்வரன், எவ்விடத்தும் இருப்பவன் ஆகையால் இங்கே வரவேண் டிய அவசியம் இல்லை.

ஆனாலும் இங்கே ஏன் வர வேண்டும் என்றால் திருவேங்கடவன் உள்ள இடத்தில் சகல தீர்த்தங்களும், புண்ணிய தலங்களும், பக்தர்களும் உள்ளனர். எனவே அவர்களின் தரிசனமாவது கிட்டும் என்ற நம்பிக்கை.

உலகத்தில் எப்பொருளையாவது எளிதாக காணலாம், பெறலாம். ஆனால் பகவானின் பக்தர்களைக் காண்பது அரிது என்று பல விதமாக பரிதவித்தார். தமக்கு தரிசன பாக்கியம் கிட்டவில்லை என்று மனம் கலங்கி – கடைசியாக *"ரக்ஷணார்த்தம் ரமாகாந்த: ரமதே ப்ராக்ருதோயதா". என்ற புராணவாக்கு 'ஒலிது பகுதரிகாசி மதுவெ ஹப்பிசி கொண்ட!'" "சுலப தேவரதேவ விஜய விட்டலரேய"* என்று பக்தர்களால் புகழப்படும் நீர் கலியுகத்தில் பத்மாவதியின் பரிணயத்திற் காக இந்த பூமியில் எழுந்தருளினாய். ஆகையால் பக்த வத்சலனான உம் தரிசனத்திற்காக வந்தேன். எனக்கு தரிசன பாக்கியம் அளிக்குமாறு கேட்டேன்.

விஜயதாசரின் பக்தியைக் கண்டு ஸ்ரீநிவாசர் மகா வைபவத்துடன் தன் அருகே அழைத்து தரிசன பாக்கிய மளித்து களிப்படையச் செய்தார். திருவேங்கடவனின் வேண்டுகோளிற்கு இணங்கி விஜயதாசர் நாற்பத்து மூன்று வார்த்தைகளில் கீர்த்தனைகளை இயற்றி சமர்ப்பித்தார்.

இவர் இயற்றிய கீர்த்தனைகள் அனைத்தும் ராக தாளங்களுடன் வர்ணித்து பாடக் கூடியவையே ஆகும். திருவேங்கடவனின் மகிமைகளை வர்ணித்து பாடும் போது மனதில் அக்காட்சிகள் நிலை பெறும்.

திரு வேங்கடவனைப் புகழக் கூடிய "வேங்கடேஸ்வர மஹத்யம்" என்ற நூலை கன்னடத்தில் மிக எளிமையாக புரியும் வண்ணம் இயற்றியுள்ளார்.

தொடரும்...



# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்





தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா



திருமால், கருடன் என்ற பறவையை தனக்கு வாகனமாக வைத்துக் கொண்டுள்ளார். எல்லாம் வல்ல இறைவனின் திருவடி கருடன் மீது படுவதால் கருடனுக்கு "பெரிய திருவடி" என்ற பெயரும் உண்டு. எப்பொழுதெல்லாம் திருமால் அவதாரம் செய்கிறாரோ அப்பொழுதெல்லாம் கருடாழ்வார் உடனிருப்பார். பிரளயத்தில் மூழ்கிய பூமியை சமுத்திரத்திலிருந்து மேலே கொண்டு வந்து, பூமி தேவியை தனது இடது தொடையில் அமர்த்திக் கொண்டு வந்தபோது, கருடாழ்வாரே திருமாலையும், பூமி தேவியையும் பூவுலகிற்குக் கொண்டு வந்து "ஸ்ரீவராகப் பெருமானாக" நிறுத்தினார் என்று வராக புராணம் கூறுகிறது.

திருமலையில் எம்பெருமான் எழுந்தருளி அங்கிருந்து எங்கும் போகாமல் நீண்ட நாள் நின்று விட்ட காரணத்தால், திருமாலை விஷ்ணு லோகம் கொண்டு போய்ச் சேர்க்க, கருடாழ்வார் அம்மலையை அப்படியே பெயர்த்தெடுக்க முற்பட்ட போது திருமால் கருடனைத் தடுத்து, உலகை ரக்ஷிக்க தாம் சில காலம் இம்மலையில் இருக்கப் போவதாகவும், அது வரையில் இம்மலையின் தெற்குத் தாழ்வரையில் நித்ய வாசம் செய்ய

# பெருமைக்குரிய கருடாழ்வார்

**திரு. டி.எம். இரத்தினவேல், ஈரோடு 8438268568**



கருடனுக்கு ஆணையிட்டதாகவும் "வாமன புராணம்" கூறுகிறது. இதனால் கருடாத்ரி, கருடாசலம் என்றும் திருமலைக்குப் பெயர்களுண்டு.

கருடாழ்வாரை சத்யன், ஸுபர்ணன், கருடன், தார்ஷ்யன், விஹகேச்வரன் என்ற ஐந்து வியூக மூர்த்திகளை உடையவன் என்றும், உயர்ந்த பஞ்ச பூதங்களைத் திருமேனியாக உடையவன் என்றும், ஆற்றலில் அனுமனைப் போன்றவன் என்றும், அதர்வண வேதத்தின் உட்பிரிவுகள் ஐந்தினையும் தனது ஐந்து அவயவங்களாகக் கொண்டவன் என்றும், இதே போல, யஜுர், ரிக், சாம வேதங்களைத் தனது திருமேனியாக உடையவன் என்றும் பத்ம புராணம் கூறுகிறது.

மணவாள மாமுனிகள் ஒரு பாசுரத்திலே *''பெரிய திருவடியைப் பண் செய்து ஏறப் பெறாமல் வெறும் புறத்திலே மேற்கொண்டவன்''* என்று ''கஜேந்திரனைக் காப்பாற்ற தான் வரும் வேகம் போதாமல் கருடாழ்வாரையும் இருக்கிக் கட்டிக் கொண்டு திருமால் பறந்து வந்தார். அப்போது அவரது வேகத்தை விட மேலும் வேகமாக கருடாழ்வார் வந்தார்'' என்று மிக அழகாகப் பாடுகிறார்.

இதையே *''தூவாய் புள்ளூர்ந்து வந்து''* என்று திருமங்கை ஆழ்வாரும், கருடாழ்வாரின் இயல்பான வேகம் போதாமையால், திருமால் தன்

திருவடிகளால் கருடாழ்வாரைத் தாங்கி நடந்து வந்தார் என்பதை கருட பஞ்சாசத் ஸ்தோத்திரத்தில் ***''உஷா தக்ஷாந்தகஸ்ய!!''*** என்ற சுலோகத்தில் கூறுவதுடன் மேலும் பல விஷயங்களையும் சொல்லிப் பாடுகிறார்.

இராவணனுக்கு முன்பு வாழ்ந்த மாலி முதலான அரக்கர்களைக் கொன்று முடி சூட்டிக் கொண்டவர் கருடாழ்வார். இதை, ***''இலங்கைபதிக்கு அன்று இறையாய அரக்கர் குலம் கெட்டு, அவர் மாள கொடிப்புள் திரிந்தாய்''*** என்று திருமங்கை ஆழ்வார் பாடியிருக்கிறார்.



விஷ்ணு புராணத்திலே ஒரு பகுதியாக கண்ணனின் கதை வருகிறது. அதில் கண்ணன் ஒரு சமயம் பசுக்களை மேய்க்கக் காட்டிற்குச் சென்றபொழுது கடுமையான வெயில் அடித்துக் கொண்டிருந்தது. கடும் வெயிலின் சூடு தாங்காது கண்ணன் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனையும் அறியாமல் ஆகாயத்திலே கருடாழ்வார் தன் சிறகுகளைப் பரப்பி நிழல் தந்து காத்தார் என்று கூறு கிறது. இதையே ஆண்டாளும் தனது பாசுரம் ஒன்றில், ***''மேலாற் பரந்த வெயில் காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ் வருவானை விருந்தா வனத்தே கண்டோம்!''*** என்று கண்ணன் பெரிய திருவடி சிறகின் கீழ் நின்று விளையாடக் கண்டதாகக் கூறுகிறாள்.

திருவேங்கடவனுக்கு கருடன் தான் கொடியாக இருக்கிறார். இதையே ஆண்டாள் மற்றொரு பாசுரத்தில் ***''ஆடும் கருடக் கொடியுடையார்''*** என்று பாடுகிறார். ***"ஓம் கருடஸ்கந்த வாஸிநே ஸ்ரீவெங்கடேசாய நம:''*** என்பது திருவேங்கடவனின் *108*–திருநாமங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. எனவேதான் கருடாழ்வாரின் செயற்கரிய செயல்களைக் கண்ட திருவேங்கடவன் புரட்டாசி திருவோணத் திருவிழாவில் "கருட வாகனம்" கொண்டு காட்சி தருகிறார். இதையே, ***''பறவையேறு பரம்புருடா"*** என்று பெரியாழ்வாரும், ***''அசுரர் மங்கக் கடாவிய வேகப் பறவையின் பாகன்''*** என்று பராங்குச நாயகியும் மங்களாசாசனம் செய்து அருளுகிறார்.

இது திருமாலுக்கும் தாயாருக்கும் எல்லா வகையிலும் அடிமை செய்யும் கருடாழ்வாராகப்பட்டவர் வேதத்தை சரீரமாகக் கொண்டவராதலால் எல்லா மகிமையும் பெற்றவர் என்பதில் ஐயமில்லை. அப்பேர்ப்பட்ட கருடாழ்வாரை நாமும் வணங்கி வழிபட்டு பூரண அருளைப் பெறுவோம்.



# மங்கள சுலோகங்கள்

*விநாயகம் குரும் பாநும் ப்ரஹ்ம*
*விஷ்ணு மகேஸ்வரம்।*
*ஸரஸ்வதீம் ப்ரணம்யாதௌ*
*ஸர்வகார்யார்த்தஸித்தயே ॥*

**விநாயகர், குரு(வியாழன்), சூரியன், பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், சரஸ்வதி ஆகியோரை எல்லாக் காரியங்களும் நிறைவு பெறுவதற்காக முதலில் வணங்குகிறேன்.**




# சென்றான், கொன்றான், நின்றான்

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

காலத்தாலும், இறைவன் மீது கொண்ட ஈடு பாட்டாலும், முதன்மைப் பெற்றிருப்பவர்கள் முதலாழ்வார்கள். மூன்று ஆழ்வார்களைத் தனித்தனி யாகச் சொன்னாலும், மூன்று ஆழ்வார்களுக்கும் அர்த்தம் ஒன்றுதான். மூன்று மகரிஷிகள் ஒன்றாகக் கூடி ஒரே விஷயத்தை வெவ்வேறு விதமாகப் பேசியதுபோல, மூன்று அந்தாதிகள் செய்திருந்தா லும், அதனுடைய சாரமான அர்த்தம் என்பது ஒன்றே.

இதனை சுவாமி பெரியவாச்சான் பிள்ளை, "மூன்று ரிஷிகள் கூடி ஒரு வ்யாகரணத்திற்குக் கர்த்தாக்கள் ஆனாற் போலே, கர்த்ரு பேதம் உண்டாகிலும் அர்த்த சீரம் ஒன்று" என்பர்.

இந்த மூன்று ஆழ்வார்களில் இரண்டாவது ஆழ்வார் பூதத்தாழ்வார். திருக்கடல்மல்லை என் கின்ற திவ்யதேசத்தில் உள்ள தலசயனப் பெருமாள் கோயில் மல்லிகை புதர்களுக்கிடையே நீலோத்பவ மலரின் நடுவில் தோன்றியவர். திருமாலின் கையில் உள்ள கௌமோதகி என்ற கதையின் அம்சமாவார். உலக வாழ்க்கையில் இன்புறாமல் திருமாலிடத்தில் நீங்காத பக்தி கொண்டவர். *''அன்பே தகளியா''* என்று தொடங்கி ஞானச்சுடர் விளக்கு ஏற்றியவர். அந்த விளக்கு சாட்சாத் திருமலை அப்பனே. *"வேங்கடமேய விளக்கு''* என்று அவனைச் சொல்லுகின்றார்கள். நம்மாழ்வாரும் *"பாசம் வைத்த பரஞ்சுடர் ஜோதி"* என்று அவனைக் கொண்டாடுகின்றார். அந்தத் திருமலையப்பன் மீது ஆராக் காதலுடன் பூதத்தாழ்வார் பாடிய ஒரு அற்புதமான பாசுரம்.

*"சென்றது இலங்கைமேல் செவ்வே தன் சீற்றத்தால்,*
*கொன்றது இராவணனைக் கூறுங்கால்-நின்றதுவும்-*
*வேய் ஓங்கு தண் சாரல் வேங்கடமே, விண்ணவர் தம்-*
*வாய் ஓங்கு தொல் புகழான் வந்து''*

இந்தப் பாசுரத்தில் திருமலை அப்பனை இராமனாகவே பாவிக்கிறார் பூதத்தாழ்வார். இப் பாசுரத்தை எத்தனை முறை படித்தாலும் பாசுரத்தில் எதுகை மோனை நயமும், அர்த்த பாவமும், நம்மை மயக்கும்.







எம்பெருமான் செய்த மூன்று செயல்களை இதிலே வரிசைப்படுத்திப் பாடுகின்றார். “1. சென்றான் 2. கொன்றான் 3.நின்றான்” என்ற மூன்று சொற்களும் அற்புதமான சொற்கள். ”எங்கே சென்றான்” என்ற கேள்விக்குள், ”எதற்காகச் சென்றான்'' என்கின்ற கேள்வியும் அடங்கியிருக்கும். ”யாரைக் கொன்றான்” என்கிற கேள்விக்குள், ”எதற்காகக் கொன்றான்” என்கின்ற கேள்வியும் அடங்கியிருக்கும். ”எங்கே நின்றான்” என்ற கேள்விக்குள், ”எதற்காக நின்றுன்” என்கின்ற கேள்வியும் அடங்கியிருக்கும்.

இதற்கான விடையை நாம் தேடினால், இந்தப் பாட்டின் மொத்த பொருளும் நமக்கு விளங்கி விடும். எங்கே சென்றான் என்பதை ஆழ்வார் இலங்கை மேல் செவ்வே(நேராகச்) சென்றான் என்று பாடுகின்றார். பொதுவாக ஒருவன் தன் நாட்டுக்கு வந்து படை எடுக்கும் வரை காத்திருந்து, அவனை எதிர்ப்பது என்பது வீரத்திற்கு உகந்ததல்ல. அதனை “அதம வீரம்” என்பார்கள். எது பேராண்மை என்று சொன்னால், எதிரியின் நாட்டுக்கே சென்று, அவனை எதிர்ப்பது.

*''ஒரு வில்லால் ஓங்கு முந்நீர் அடைத்து*
*உலகங்கள் உய்யச்*
*செருவிலே யரக்கர் கோனைச் செற்ற நம்*
*சேவகனார்''*

என்று இத்திறத்தை தொண்டரடிபொடியாழ்வாரும், ***''சென்றங்கு தென்னிலங்கை செற்றாய்''*** என்று ஆண்டாள் நாச்சியாரும் வழிமொழிகிறார்கள். தேவாதி தேவர்களும் இராவணன் மீது கொண்ட பயத்தால் மறைந்தும் மயங்கியும் கிடக்க, யாராலும் நுழைய முடியாத பெருநகரமான இலங்கைக்கு வீராதி வீரனான இராமபிரான் நேராகச் சென்றான். இந்த இடத்தில் இராவணனுடைய வீரமும், இராம பிரானின் வீரமும் ஒப்பிட்டுப் பார்க்கிறார் ஆழ்வார். “முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய பெருந் தவமும், முதல்வன் முன்னாள் எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும், ஏனைத் திக்கோடும் உலகனைத்தும் செருக் கடந்த புயவலியும், உடைய பெருவீரன் இராவணன்” என்று நினைக்கிறோம். அப்படியல்ல என்கிறார்கள் ஆழ்வார்கள்.

இராவணன் பயந்தாங்கொள்ளியாக, ஆளில்லாத நேரத்தில், பொய் மானை அனுப்பி, இராமனையும் இலட்சுமணனையும் வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டு, சீதையைத் தூக்கிக் கொண்டு சென்றான்.

இராமனுடைய வீரத்தை கர தூஷண வதம் மூலம் அறிந்ததும், இராமன் இடத்திற்கு வந்து போர் புரிய விரும்பவில்லை. ஆனால், இராமன் இராவணனின் முகவரியைத் தேடி, அவன் ஊருக்கேச் சென்று போர் செய்தான். எதற்காகச் சென்றான் என்பது அடுத்த கேள்வி. பாகவத விரோதியான இராவணனை கொல்வதற்காகச் சென்றான்.

ஏன், அதை இருந்த இடத்திலேயே இருந்து, சங்கல்ப மாத்திரமாகச் செய்திருக்கலாமே என்கின்ற கேள்வி வரும். அன்புள்ளவர் மாட்டு ஒரு செயலைச் செய்கின்ற பொழுது, தானே நேரில் போய் செய்தாலல்லது திருப்தி இருக்காது.

பகவானுக்கும் அப்படித்தான். “ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயரருளிச் செய்வர்'' என்பது ஸ்ரீவசநபூஷணம். அதாவது “ஸங்கல்பமாத்திரத்தாலே எல்லாவற்றையும் நிர்வகிக்கவல்ல சர்வசக்தியான சர்வேச்வரன்





தன்னை யழியமாறி, மநுஷ்யர்களைப் போன்று அவதரித்து, கை தொடனாய் நின்று செய்த ராவ ணாதிநிரஸநரூபமான அதிமாநுஷருக்த்யங்கள் எல்லாம் மஹர்ஷிகள் முதலான பாகவதர் திறத்தில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே” என்று நஞ்சீயரருளிச் செய்வராம்.

திருவாழியாழ்வானைக் கூட ஏவாமல் ஸங் கல்ப மாத்திரத்தாலே காரியஞ் செய்ய வல்லமை எம்பெருமானுக்கிருந்தாலும், ஆச்ரிதர்களுக்காகத் தானே உடம்பு நோவக் காரியஞ் செய்தாலன்றித் தனக்கு திருப்தி பிறவாதாகையால் தானே நேரில் வந்து தோன்றிக் கைதொட்டுக் காரியஞ் செய் கின்றானாம்.

அடுத்த பதம் “கொன்றான்”. விட்டுவைக்க முடியாதபடிக்கு விரோதத்தை வளர்த்துக் கொண்ட வன் இராவணன். “இன்று போய் நாளை வா” என்று சொன்ன பிறகும், திருந்தாதவன். தன்னுடைய செய்கைக்கு வருந்தாதவன்.

இனி அவனைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை வந்தபோது, இல்லாத சினத்தை ஏறிக்கொண்டு, (க்ரோத மஹாரயத் தீவ்ரம்–வான்மீகி) பகவான் இராவணனுடைய அடியார் விரோதச் செய்கைக்காகக் கொன்றான்.

அதற்குப் பிறகும், “ஐயோ இந்த இராமாவ தாரத்தில், தன்னைப் பார்க்காதவர்கள் பார்க்க வேண்டுமே என்று நின்று அருள் தர விரும்பினான். அதற்கு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தான். ஓங்கிய மூங்கில் மரங்களோடு குளிர் சாரலும் கூடிய அழ கான மலை கண்ணில் பட்டது. அந்த மலைதான் வேங்கடமலை. பின்னானார் வணங்கும் ஜோதியாக, தான் நிற்பதற்கு இந்த மலைதான் சிறந்தது என்று நினைத்து இன்றுவரை அங்கு நின்று கொண்டிருக் கிறான். சௌசீல்ய சௌலப்யாதி குணங்கள் ஓங்க நிற்கின்றான்.

அதனால் அவன் புகழும் வளர்ந்தது. அவன் நின்ற திவ்ய தேசத்தின் புகழும் வளர்ந்தது. இப்படிப்பட்ட பெருமையை வேறு யாருக்கு அல்லது எந்த திவ்ய தேசத்திற்குச் சொல்ல முடியும்? இப் பெருமை திருமலைக்கு மட்டும்தான் உண்டு. திருவேங்கடவனுக்கு மட்டும் தான் உண்டு.

பாசுரம் படிப்போம்...

## சாஸ்த்திர நீதிகள்–91

யஸ்ய மித்ரேண ஸம்லாப:
யஸ்ய மித்ரேண ஸம் ஸ்திதி: |
யஸ்ய மித்ரேண சம்பாஷ:
ததோ நாஸ்திக புண்ய பாக் ||

நல்ல அறிவு வளரக் கூடிய புத்தகங்களை படித்து அதன்படி வாழ்வதும், தெய்வ நம்பிக்கையுடன் வழிபடுவதும், நல்ல நண்பன் அமைவதும் எல்லாம் புண்ணியம் செய்வதால் கிடைக்கிறது.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.





# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## दशमः पाठः பாடம்-10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. देवाः | = கடவுள்கள் | 2. अन्यत्र | = வேறொரு இடம் | 3. कुर्वन्ति | = செய்து கொண்டிருக்கிறார்கள் |
| 4. देवं | = கடவுளுடைய | 5. तथा | = அப்படியே | 6. कुरुथ | = நீங்கள்செய்து கொண்டிருக்கிறீர்கள் |
| 7. देवान् | = கடவுள்களை | 8. सर्वत्र | = எல்லா இடங்கள் | 9. कुर्मः | = செய்து கொண்டிருக்கிறோம் |

### வினாக்கள்

1. के किं कुर्वन्ति?
2. ते अन्यत्र सन्ति।
3. तथा वा!
4. हन्त! यूयमत्र किं कुरुथ?
5. किमपि नास्ति।
6. केचन तत्र न सन्ति।
7. कतिचन न सन्ति?
8. वयं सर्वेऽपि अत्रैव स्मः।
9. एते सर्वेऽपि देवाः इति।
10. वयं सर्वेऽपि किमपि न कुर्मः।

1. நீங்கள் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
2. நாங்கள் அங்கு இருந்தோம்.
3. ஒன்றும் இல்லை.
4. அவர்கள் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?
5. ஒன்றும் செய்வது இல்லை. (செய்யவில்லை)
6. நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்.
7. கடவுள்கள் எங்கிருக்கிறார்கள்.
8. எங்கும் இல்லை.
9. பெரியவர்கள் யார்?
10. அவர்கள் கூட பெரியவர்களே.

### விடைகள்

1. யார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்.
2. அவர்கள் வேறொரு இடத்தில் இருக்கிறார்கள்.
3. அப்படியா?
4. ஐயோ! நீங்கள் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
5. ஒன்றும் இல்லை.
6. சிலர் அங்கு இல்லை.
7. யாரும் இல்லை.
8. நாங்கள் எல்லோரும் இங்கேயே இருக்கிறோம்.
9. இவர்கள் எல்லாரும் கடவுளாம்.
10. நாங்கள் எல்லோரும் ஒன்றும் செய்வது இல்லை.

1. यूयं तत्र किं कुरुथ?
2. वयं तत्रास्म।
3. किमपि नास्ति।
4. ते तत्र किं कुर्वन्ति?
5. न किञ्चिदपि।
6. वयं किं कुर्मः?
7. देवाः कुत्रासन्?
8. कुत्रापि नासन्।
9. अग्रजाः के?
10. ते सर्वेऽपि अग्रजाः।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்



# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

4

# க்ருதஜ்ஞன்

*சிறு உதவி பெற்றாலும் நன்றி மறவாதவன். ஒருவன் பெரும் தீங்கு செய்தாலும் அதனை மன்னித்து மறப்பவன்.*

**திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.**

## என்றுமிருப்பவனை விட இன்று வந்தவன் முக்யமா?

இலங்கையில் போர் தொடங்கும்முன் இராமன் ஸுவேல மலையின் மேலேறி இலங்கையின் அமைப்பையும் படை பலத்தையும் பார்வையிடு கிறான். அப்போது த்ரிகூட மலையின் மேல் இராவணன் செருக்கோடு பத்து தலைகளிலும் வைரகிரீடத்தோடு நிற்பதைக் கண்டு பொறுக்க முடியாத சுக்ரீவன், திடீரெனத் தாவிச் சென்று அவனோடு போர் புரிந்து அவன் கிரீடங்களைப் பரித்துக் கொண்டு வந்து இராமன் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டு ஒதுங்கி நின்றான். பதறிப்போன இராமன் “ஏன் இப்படிச் செய்தாய்? உனக்கு ஏதேனும் ஒன்று நேர்ந்திருந்தால் அதற்குமேல் நான் சீதையை அடைந்து என்ன பயன்?” என்றான். தனக்கு உதவி புரிவதற்காக சுக்ரீவன் அனுமனைக் கொண்டு சீதையைக் கண்டு பிடித்தான்; மேலும் அரக்கரை ஒடுக்க, பெரும்படை திரட்டி வந்திருக்கிறான்– என்ற நன்றி மனது முழுவதும் நிரம்பி இருந்ததால் ஸ்ரீமஹாலக்ஷ்மியான சீதை கூட இராமனுக்கு முக்யமாகப் படவில்லை. நாமாக இருந்தால் “இராமன் சுக்ரீவனுக்கு மனைவியையும் அரசையும் மீட்டுக் கொடுத்தான். அதற்கு நன்றி யாகத் தானே சுக்ரீவன் உதவுகிறான்! இதற்கு ஏன் இராமன் இப்படி பதறுகிறான்!” என்றே நினைப் போம்.

தான் பிறருக்குச் செய்த பற்பல உதவி களையெல்லாம் மறந்து, பிறர் தனக்குச் செய்த ஒரு சிறு நன்மையையும் பெரிதாகக் கொள்ளுதலே உத்தமர்களின் அடையாளம்.

## தலை போகிற அவசரத்திலும் நன்றி மறவாதே!

பரதனுக்குக் கொடுத்த பதினான்கு ஆண்டு கெடு முடியும் பதட்டத்தினால், யுத்தம் முடிந்த உடனே சிறிதும் ஓய்வு எடுக்காமல் ஸ்ரீராமன் புஷ்பக





## கருத்து

**நாம் மனிதானாகப் பிறந்ததற்கும் பக்தனானதற்கும், நம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றி கூறுவோம்; இனியும் அவர் விருப்பப்படியே வாழ்ந்து, பிறவிப் பயனடைய வேண்டிக் கொள்வோம்.**

விமானத்தில் இலங்கையிலிருந்து புறப் படுகிறான். விமானம் கிஷ்கிந்தைக்கு மேல் பறக்கும்போது சுக்ரீவன் "ஹே ஸ்ரீராம ப்ரபு! எங்கள் வானரப் பெண்க ளெல்லாம் அயோத்திக்கு வந்து தங்கள் பட்டாபிஷேகத்தைக் காண ஆசைப் படுகிறார்கள்! அழைத்துப் போக லாமா?" என்றான். தமது கணவன்மார் களைப் பிரிந்து தனக்காக அப்பெண்கள் செய்திருக்கும் தியாகத்தை மறவாத இராமன், உடனே விமானத்தை நிறுத்தி அனைவரையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். வானரப் படைகளெல்லாம் சீதையைச் சூழ்ந்து கொண்டு அவளைப் பார்த்து வியந்தனர். அப்போது சீதையின் பின்னாலிருந்த ஒரு குரங்குப் பெண் "ஓ! வாலில்லாத ஒரு பெண்ணுக்காகவா இவ்வளவு பெரிய போர் நடந்தது!" என்று கூவிற்று. இறுதியில், அனைவரும் ஆனந்தமாக அயோத்தியை அடைந்தனர்.

குரங்குகளிடம் கூட நன்றி மறவாத இராமனை முன்னுதாரண மாகக் கொண்டு நாம் மனிதர்களிடமாவது நன்றியோடு இருப் போம்.

### கடுகளவு நன்றி மறந்தாலும் மலையே விழும்

இராவணன் எய்த ஆயுதத்தால் இராமனும் லக்ஷ்மணனும் மயங்கி விழுந்தனர். இமயமலைத் தொடரில் இருக்கும் சஞ்ஜீவனி மலையில் உள்ள மூலிகைகள் வந்தாலே காப்பாற்ற முடியும் எனும் நிலையில் ஹனுமான் பறந்தார். மலையை அடைந்து மூலிகைகளைத் தேடினார். சட்டென்று கிடைக்க வில்லை. சினம் கொண்ட மாருதி "சஞ்ஜீவனி மலையே! இராமனுக்குத் தொண்டு புரியும் வாய்ப்பை இழக்கிறாய். தர்மத்தை நிலை நாட்டும் இராமனிடம் உனக்கு நன்றி இல் லையே! ஏன் மூலிகைகளை வெளிப் படுத்த மறுக்கிறாய்!" என்று கூறி, தேட நேரமின்மையால் மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு பறந் தார். இராமனைக் காத்தார்.



ஆஞ்ஜநேயரை வணங்காதவர் யார்? ஆகவே நாம் மலை போல் உயர்ந்திருந்தாலும் கடுகளவும் நன்றி மறக்கக் கூடாது.

*வளரும்...*



# ஆன்மீகம் நிறைந்த ஆவணி மாதம்









–திரு.டி. ஆர். பரிமளரங்கன்,
திருவரங்கம், 97156 64450.

சுபமுகூர்த்தங்களும், பண்டிகைகளும், விழாக்களும் நிறைந்தமாதம் ஆவணி. இம்மாதத்தில் சூரியன் சிம்மராசியில் ஆட்சி பலத்துடன் சஞ்சரிக்கிறார் என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன. "நவக்கிரகங்களின் தலைவனான சூரியன் ஆட்சி பலத்துடன் சஞ்சரிக்கும் இந்தக் காலக்கட்டத்தில் நாம் மேற்கொள்ளும் புனித காரியங்கள், விரதங்கள், வழிபாடுகள் அனைத்தும் நல்ல பலன்களைத் தருவதுடன், நம் வாரிசுகளையும் சுகமாக வாழ வைக்கும்" என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

ஆவணி மாதத்தினை வடமொழியில் "சிராவண மாதம்" என்பர். சிராவண மாதமான ஆவணியில் பௌர்ணமிக்குப்பின் வரும் அஷ்டமி திதியில் பகவான் கிருஷ்ணர், மதுராவில் கம்சனின் சிறையில் நடுஜாமத்தில், இருள் சூழ்ந்த நிலையில் தேவகிக்குக் குழந்தையாக அவதரித்தார் என்று புராணம் கூறுகிறது. அந்த நாளை ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி என்று பாரதம் எங்கும் கொண்டாடப்படுகிறது.

பொதுவாக, அஷ்டமி திதியில் சுப நிகழ்ச்சியை தவிர்ப்பது வழக்கம். ஆனால், பகவான் அஷ்டமி திதியில் அவதரித்து, உலகிற்கு பல அரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார் என்பது ஆன்மீகச் செய்தியாகும். முக்கியமாக கோகுலாஷ்டமி நாளில் சூரியன் ஆட்சி பலத்துடனும், சந்திரன் உச்சபலத்துடனும் சஞ்சரிப்பார்கள் என்று ஜோதிட விற்பன்னர்கள் கூறுகிறார்கள்.

மேலும், ஆவணி மாதம் திருவோண நட்சத்திர நாள் ஓணம் பண்டிகையாக கேரள மக்கள் கொண்டாடுகிறார்கள். ஜாதி, மத பேதமின்றி அனைத்து மக்களும் கொண்டாடும் விழா, திருவோணத்திருவிழா. இந்நாள் கொல்லம் என்றழைக்கப்படும் மலையாள வருடப் பிறப்பாகவும் திகழ்கிறது. இந்நாளில்தான் தமிழகத்தில், ஆந்திராவில், தெலுங்கானாவில், கர்நாடகாவில் சுமங்கலிப் பெண்கள் ஸ்ரீவரலட்சுமி விரதத்தினை மேற்கொள்கிறார்கள். அன்று விரதம் கடைபிடித்து ஸ்ரீவர லட்சுமி தேவியை வழிபடுவதால் நீடூழிசுமங்கலி பாக்கியம்

கிட்டும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும் தடையின்றி நிறைவேறும்.

பகவான் மகாவிஷ்ணு, வாமனனாக அவதரித்தப் புனித நன்நாள் ஆவணி திருவோணம், மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்ணைத்தானமாகப் பெறுவதற்காக, உலகளந்தப் பெருமாளாக வானுயற வளர்ந்து நின்று ஓர் அடியில் விண்ணையும், இரண்டாவது அடியில் மண்ணையும் அளந்து மூன்றாவது அடியை மகாபலியின் தலையில் வைத்து பாதாள உலகத்திற்கு அனுப்பிய புனிதமான நாள் திருவோணம். ஒவ்வொருவர் வீட்டின் வாசல் முன்பு அத்திப்பூ கோலம் என்னும் வண்ணமலர்களால் அழகிய கோலம் போட்டு, புத்தாடை அணிந்து விழா கொண்டாடுவது வழக்கம்.

“சிம்ம மாதம்” என்று போற்றப்படும் இந்த ஆவணி மாதம் அமாவாசைக்கு அடுத்த நான்காம் நாள் “விநாயகர் சதுர்த்தி விழா” இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிறது. “ஆதி முதல்வன் ஜெயந்தி” என்று போற்றப்படும்.

இந்த ஆவணி மாதத்தில் பல விசேஷதினங்கள் இருந்தாலும் முக்கியமான விழாவாக கோகுலாஷ்டமி, வாமன ஜெயந்தி எனும் ஓணம் பண்டிகை, விநாயக சதுர்த்தி ஆகியவைகள் மிகவும் போற்றப்படுகின்றன.

ஆவணி மாதம் சூரியன் சிம்மராசியில் சஞ்சரிப்பதால் ஆவணி மாத ஞாயிற்றுக் கிழமைகள் சூரிய வழிபாட்டிற்கு உகந்த நாள் என்று ஞான நூல்கள் கூறுகின்றன. இம்மாதத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சூரியனின் சக்தி கூடுதலாக உள்ளதால் அன்று சூரிய பகவானுக்குப் பொங்கலிட்டு வழிபடுவதும் குறிப்பாக ஆதித்ய ஹிருதயம், ஸ்தோத்திரங்கள் படிப்பதும், ஸ்ரீகாயத்ரி மந்திரங்கள் ஜபிப்பதும் சிறப்பான பலன்களைத் தரும். இதனால் கண்ணொளி பிரகாசிக்கும், முகத்தில் ஒரு தேஜஸ் கூடும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மேலும், ஆவணி ஞாயிற்றுக் கிழமைகளில் அம்மனை வழிபடுவது மிகச் சிறப்பாகக் கூறப்படுகிறது. அம்மனுக்குரிய நாளாகவும், ஆவணி ஞாயிற்றுக் கிழமை கருதப்படுவதால் அன்று அம்பாளையும் வழிபட்டு பேறுகள் பெறலாம். அன்று மாலை வேளையில் கோயிலுக்குச் செல்வதைத் தவிர்த்து, காலையில் சென்று அபிஷேக ஆராதனைகளில் கலந்து கொண்டு அம்பாளைத் தரிசிப்பது சிறப்பு என்பர். அன்று வசதிக்கு ஏற்ப அன்னதானம், ஏழைகளுக்கு வஸ்திரதானம் என்று தான தர்மங்கள் செய்வதாலும் சூரிய பகவான் அருளும், அம்பாள் அருளும் கிட்டும் என்று ஞானநூல்கள் கூறுகின்றன. மேலும், ஆவணி பௌர்ணமி அன்று உபவாசம் மேற்கொண்டு அம்பிகையை வழிபட்டால் சகலசௌபாக்கியங்களையும் பெறலாம். பௌர்ணமி பூஜை அனைவருக்கும்



நன்மை தரக்கூடிய பூஜை என்றாலும் பெண்களுக்கு சிறப்பான கூடுதல் பலன்களை அளிக்கக் கூடியது என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஆவணி மாத பௌர்ணமி அன்று வடநாட்டில் ரக்ஷாபந்தன் என்ற பண்டிகை பெண்களால் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உபநயனம் செய்து கொண்டவர்கள் ஆவணி மாதத்தில் அவிட்டம் நட்சத்திரத்தோடு கூடிய பௌர்ணமி அன்று கொண்டாடும் பண்டிகை ஆவணி அவிட்டம் ஆகும். இதனைத் தொடர்ந்து ஸ்ரீகாயத்ரீ ஜபம் செய்வது வழக்கம்.

இம்மாதத்தில் தான் ஸ்ரீகருட ஜெயந்தி வருகிறது. அன்று வானில் பறந்து கொண்டிருக்கும் கருட பக்ஷியைத் தரிசித்தால் மகாவிஷ்ணுவின் அருள் கிட்டும்.

எம்பெருமான், ஞானம் வழங்கும் பரிமுகப் பெருமானாக ஸ்ரீஹயக்ரீவராக ஒரு கல்பத்தில் அவதாரம் செய்தருளிய நாள் ஆவணி மாதத்து பௌர்ணமி திருவோண நட்சத்திரத்தில் ஆகும். ஸ்ரீஹயக்ரீவரை வழிபட கல்வி, ஞானத்தில் சிறந்து விளங்கலாம் என்று வேதநூல்கள் கூறுகின்றன.

பலசிறப்புகள் பெற்ற ஆவணி மாதத்தில் இறைவழிபாட்டில் ஈடுபட்டால் நலமுடனும் வளமுடனும் வாழலாம் என்று ஞானநூல்கள் கூறுகின்றன.

### பஞ்சாங்கமும் சூட்சும பொருளும்

# நட்சத்திர யோகங்கள்



முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
9444392595.

யோகங்கள் எனும் பஞ்சாங்க குறிப்பில் நட்சத்திர யோகங்கள் 27 என பிரிக்கப்பட்டுள்ளது. இது நட்சத்திர மண்டலத்தில் அமைந்திருக்கும் நட்சத்திர கூட்டங்கள் ஆகும். இது நாளொன்றுக்கு ஒரு யோகம் என மாதத்திற்கு 27 பெயர்களால் குறிக்கப்படுகிறது. அவை,

1) விக்ஷகம்பம், 2) பிரீதி, 3) ஆயுஷ்மான், 4)சௌபாக்யம், 5) சோபனம், 6) அதிகண்டம், 7)சுகர்மம், 8) துருதி, 9) கண்டம், 10) விருத்தி, 11)துருவம், 12) வியாகாதம், 13) ஹர்ஷணம், 14)வஜ்ஜிரம், 15)சித்தி, 16) வியத்பாத், 17) வரியான், 18) பரீகம், 19)சிவம், 20) சித்தம், 21) சாத்தியம், 22)சுப்பிரம், 23)பிராம்மணம், 24) மாகேந்திரம், 25)வைதிருதி, 26)சூலம், 27) சுபம்.

### பஞ்சாங்கத்தில் வருடம் பற்றிய சில குறிப்புகள்.

காலச்சக்கரத்தில் ஒரு வருடம் என்பது பூமி ஒரு முறை சூரியனைச் சுற்றி வரும் கால அளவு ஆகும். இங்கு வருடம் என அழைப்பதற்கான காரணம் மழைப்பொழிவு என்பதை வருஷம் என்றழைப்பர். மழை நீர் நாம் வாழும் இந்த உயிர் கோளத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். எனவேதான் வாழ்வியலில் காலம் என்று கணக்கிடவே வருடம் என வகுக்கப்பட்டுள்ளது. வருடம் என்பது 12 மாதங்கள் உள்ளடக்கியது. 12 மாதங்களை முறையே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி மற்றும் பங்குனி. தோராயமாக மாதம் ஒன்றுக்கு 30 நாள் வீதம் 365 நாட்களைக் கொண்டது ஒரு வருடம் ஆகும். இங்கு சூரியன் பிரவேசிக்கும் ராசிக்கட்டம் மாதம் ஆகும். மேஷ ராசி முதல் மீன ராசி வரை உள்ள 12 ராசிகள் 12 மாதங்களை குறிப்பதாகும்.

### அயனாங்கள் :

வருடத்தின் இருபெரும் பிரிவுகளாக அயனங்கள் வருகின்றன. இதன் விஞ்ஞான காரணமாக பூமியின் காந்தவிலகள் சரிவு 23 1/2 டிகிரி தெற்கு நோக்கி உள்ளதால் பூமி, சூரியனை ஒரு வலம் சுற்றுவதற்கு

## மாதங்கள்

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி மற்றும் பங்குனி

உத்ராயணம்
தக்ஷிணாயணம்

தை மாதம் முதல் ஆனி கடைசி வரையுள்ள காலம் உத்ராயண காலம். ஆடி மாதம் முதல் மார்கழி கடைசி வரையுள்ள காலம் தக்ஷிணாயன காலம்.

## ருதுகாலங்கள்





1) சித்திரை, வைகாசி ஆகிய இரு மாதங்களுக்கு வஸந்தருது – இளவேனிற்காலம் என்றும், 2) ஆனி, ஆடி – க்ரிஷ்மருது – முதுவேனிற்காலம் என்றும், 3) ஆவணி, புரட்டாசி – வர்ஷருது – கார்காலம் என்றும் இம்மூன்று ருதுக்களும் முல்லை நிலத்தினையும், 4) ஐப்பசி, கார்த்திகை – சரத்ருது – குளிர்காலம் மற்றும் குறிஞ்சி நிலத்தினையும், 5) மார்கழி, தை – ஹேமந்தருது – முன்பனி காலம் எனவும் மருத நிலத்தினையும், 6) மாசி, பங்குனி – சிசிரருது – பின் பனிக்காலம் நெய்தல் நிலத்தினையும், பாலை ஆறு ருதுக்களிலும் உள்ளது என்றும் நம் முன்னோர்கள் பருவகால மாற்றங்களை வாழ்வியலுடனும், வாழிடத்தையும் இணைத்து குறிஞ்சி– மலையும் மலை சார்ந்த நிலத்தினையும், முல்லை – காடும் காடு சார்ந்த நிலத்தினையும், மருதம் – வயலும் வயலைச் சார்ந்த நிலத்தினையும், நெய்தல் – கடலும் கடலைச் சார்ந்த நிலத்தினையும் பிரித்து இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தனர்.





இரண்டு அயனங்கள் எடுத்துக் கொள்கிறது. உத்ராயணம் மற்றும் தக்ஷிணாயனம் என இருபெரும் பிரிவுகளில் உத்ராயணம் என்பது சூரியக் கதிர்கள் மகர ராசியில் அதாவது தை மாதம் பிரவேசிக்கும் பொழுது தொடங்குகிறது. தை மாதம் முதல் ஆனி கடைசி வரையுள்ள காலம் உத்ராயண காலம் ஆகும்.

இதே போன்று சூரியன் தெற்கு நோக்கி நகரும் காலம் தக்ஷிணாயணம் என அழைக்கப்படுகிறது. இது ஆடி மாதம். அதாவது கடக ராசியில் சூரியக் கதிர்கள் விழும் காலம் ஆகும். இது ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரை இறை வழிபாடும், தை முதல் ஆனி வரை இயற்கை வழிபாடும் நம் வாழ்வியலில் ஒன்றிணைந்து உள்ளது.

உத்ராயண காலங்களில் சுப காரியங்களான குடமுழுக்கு, புதுமனை புகுவிழா, திருமண வைபவங்கள் நடத்துவதற்கு ஏதுவான காலங்கள் ஆகும். தக்ஷிணாயன காலங்களில் இறைவழிபாடு செய்தல் நம் தலைமுறை செழிக்கும். இக்கால இடைவெளியில் சுபகாரியங்கள் தவிர்ப்பது நல்லது.

### ருது காலங்கள் :

ருது என்பது அயனங்களை சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆறு ருதுக்களாக பெயரிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ருதுகாலம் ஒரு மாதங்களை உள்ளடக்கியது.

### கிழமைகள் :

இது மாதங்களின் உட்பிரிவுகளாக நான்கு வாரங்கள் ஒரு மாதம் எனவும், வாரத்திற்கு ஏழு கிழமைகளாகவும் கருதப்படுகிறது.

இங்கு ஏழு நாட்களுக்கு நாள் ஒன்று ஒரு கிரகத்தின் பெயரினை கொண்டது. ஞாயிறுக்கு சூரியனும், திங்களுக்கு சந்திரனும், செவ்வாய்க்கு செவ்வாய் கிரகமும், புதன், வியாழன், வெள்ளி

ஞாயிறு திங்கள் செவ்வாய்

ஒரு நாள் என்பது அறுபது நாழிகைகளாகக் கொண்ட கால அளவாகும். இது ஒரு நாள் என்பது சூரிய உதயம் முதல் மறுநாள் சூரியோதயம் வரையுள்ள அறுபது நாழிகையாகும். ஒரு நாளைக்குரிய பெயராக வாஸரம் என்ற சொல் சங்கல்பத்தில் பயன்படுத்தப்படுகிறது. அவை,

| | | |
|---|---|---|
| 1) ஞாயிற்றுக்கிழமை | - | பானு வாஸரம் |
| 2) திங்கட்கிழமை | - | இந்து வாஸரம் |
| 3) செவ்வாய்க்கிழமை | - | பௌம வாஸரம் |
| 4) புதன்கிழமை | - | சௌம்ய வாஸரம் |
| 5) வியாழக்கிழமை | - | குரு வாஸரம் |
| 6) வெள்ளிக்கிழமை | - | ப்ருகு வாஸரம் |
| 7) சனிக்கிழமை | - | ஸ்திர வாஸரம் |

சனி புதன் வெள்ளி வியாழன்

மற்றும் சனி நாட்களுக்கு புதன், குரு, சுக்ரன் மற்றும் சனி கிரகங்களாகும். சாயாகிரகங்களான இராகு கேது என தனி கிழமை கொடுக்கப்படாமல் ஏழு நாட்களிலும் ஒன்றரை மணி நேரம் ஒவ்வொரு நாட்களிலும் கடந்து வருகிறது.

இராகு, கேது அல்லது எமகண்டம் மற்றும் குளிகன் என மூன்று காலங்களும் ஒன்றரை மணி நேரம் எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு நாளும் கடந்து செல்கிறது.

அறிவியற் சார்ந்து இராகு, கேது விற்கு என தனி சுற்று வட்ட பாதை கிடையாது. மற்ற ஏழு கிரகங்கள் சுழலும்போது சிதறுகின்ற தூசுக்கள் ஒன்று சேர்ந்து இராகு, கேது என சாயாக் கிரகங்கள் உருவெடுக்கின்றன.

ஒவ்வொரு கிரகத்திலிருந்து வெளிவிடப்படும் தூசுத் துகள்கள் சிதறும் ஒன்றரை மணித்துளியினை கணித்து இராகு, கேது (எமகண்டம்) மற்றும் குளிகன் காலம் என பெயரிட்டுள்ளனர். இதனை கணக்கிட்டு ஞாயிற்றுக் கிழமை அன்று சிதறல்கள் மாலை 4.30 – 6.00 மணி வரை இராகு காலம் எனவும், பகல் 12–1.30 மணி வரை கேது (எம கண்டம்) என பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வரும் அட்டவணையில் இராகு, கேது (எமகண்டம்) மற்றும் குளிகன் நேர காலங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கால நேரங்களில் சுப காரியங்களை விலக்குதல் நன்று.



சாயா கிரக நேரங்கள்



| எண் | கிழமை | இராகு | எமகண்டம் | குளிகன் | |
|---|---|---|---|---|---|
| 1. | ஞாயிறு | மாலை 04.30–06.00 | பகல் 12.00–01.30 | பகல் : | 03.00–04.30 |
| | | | | இரவு : | 09.00–10.30 |
| 2. | திங்கள் | காலை 07.30–09.00 | காலை 10.30–12.00 | பகல் : | 01.30–03.00 |
| | | | | இரவு: | 07.30–09.00 |
| 3. | செவ்வாய் | மாலை 03.00–04.30 | காலை 09.00–10.30 | பகல் : | 12.00–01.30 |
| | | | | இரவு: | 06.00–07.30 |
| 4. | புதன் | பகல் 12.00–01.30 | காலை 07.30–09.00 | பகல் : | 10.30–12.00 |
| | | | | இரவு: | 03.00–04.30 |
| 5. | வியாழன் | பகல் 01.30–03.00 | காலை 06.00–07.30 | பகல் : | 09.00–10.30 |
| | | | | இரவு: | 01.30–03.00 |
| 6. | வெள்ளி | காலை 10.30–12.00 | மாலை 03.00–04.30 | பகல் : | 07.30–09.00 |
| | | | | இரவு: | 12.00–01.30 |
| 7. | சனி | காலை 09.00–10.30 | காலை 01.30–03.00 | பகல் : | 06.00–07.30 |
| | | | | இரவு: | 10.30–12.00 |



# ஸ்ரீமத் பகவத்கீதை

தெலுங்கு மூலம் :
திரு.கே.விஸ்வநாத சர்மா
தமிழாக்கம் :
டாக்டர் சி. கோவிந்தசாமி, 94445 82356

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

துரியோதனன் துரோணாச்சாரியரிடம் "தாங்கள் பாண்டவர்களுக்கே அதிகமாக கல்வி கேள்விகளைக் கற்றுக் கொடுத்தீர்கள். எங்களுக்கு சற்று குறைவாகவே சொல்லிக் கொடுத்தீர்கள். இன்னும் சொல்லப் போனால், உங்கள் பிள்ளைக்குக் கூட கற்றுக் கொடுக்காத அஸ்திர பயிற்சிகளை அர்ச்சுனனுக்கு கற்றுக் கொடுத்தீர்கள். இப்பொழுது பாருங்கள், அவர்கள் உங்களுக்கு நேராக நின்று போர் புரிந்து உங்களை கொல்லவும் முற்பட்டார்கள்" என்றான். துரியோதனன் பார்வையில் பாண்டவர்கள் மிகவும் எளிமையானவர்கள். பாண்டவர்கள் நாடு ஏதும் இல்லாதவர்கள். நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள். அவர்கள் பக்கம் யார் வந்து போர் செய்வார்கள்? என்று எண்ணியிருந்த துரியோதனனுக்கு, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே பாண்டவர்கள் பக்கம் வந்து நிற்பதைப் பார்த்து மிகவும் பொறாமைக் கொண்டான். அதனால், "மஹதீம் சமூம்" என்றான்.

பொதுவாகத் தன் படைவீரர்கள் மீது நம்பிக்கைக் கொள்வதும் வெற்றி நமதே என்று வீர முழக்கமிடுவதும் வழக்கம். ஆனால், எதிரியின் படை பலத்தைக் கண்டு பெரிதாக எண்ணுவது என்னென்பது? ஆவேசத்திலோ வருத்தத்திலோ ஒருவர் அவ்வாறு பேசுவதும் உண்டு. ஆனால், அதற்குப் பின்பும், "வ்யூடாம் துருபதபுத்ரேண" என்று கூறுவது எல்லோரையும் விலக்க வைக்கிறது. "துருபத" என்ற சொல்லை இங்கு குறிப்பிடுவதில் ஒரு ஏளனக் குறிப்பை உணர முடிகிறது. துருபதன் ஓர் அரசன், "பாண்டவர்களுக்கு மாமா முறையும் கூட, இவரும் துரோணாச்சாரியரும் சிறு வயது முதல் ஒன்றாகச் சேர்ந்து கல்வி பயின்று வந்தனர். இவர்கள் இருவருக்கும் குருவானவர் துரோணாச்சாரியனின் தந்தை ஆவார். துருபதனும் துரோணாச்சாரியரும் மிகவும் நட்புடன் பழகி வந்தனர். ஒரு சமயம் துருபதன் துரோணாச்சாரியரைப் பார்த்து "நான் பெரியவனானதும் ராஜாவாக ஆவேன். நீ அப்போது என்னோடு வந்துவிடு. உன்னை நான் நன்றாகப் பார்த்துக் கொள்வேன் என்றார்.

பின்பு,துருபதன் மஹாராஜாவாக ஆனான். துரோணருக்கும் "கீருபி" என்ற பெண்ணோடு திருமணம் நடைபெற்றது. அவர்களுக்கு அஸ்வத்தாமன் என்ற ஒரு பிள்ளை பிறந்தான். அதுவரையில் மிகவும் அடர்ந்த அச்சம் தருகின்ற காட்டுக் குள்ளேயே இருந்து தவம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். குழந்தையின் மீது இருந்த அன்பு காரணமாக எப்படியாவது ஒரு பசுவை நாம் பெற்றாக வேண்டும் என முடிவு செய்து புறப்பட்டார். யாரிடம் சென்றால் நமக்கு பசு கிடைக்கும் என நினைத்துப் பார்த்தார். அப்பொழுது தன் பால்ய நண்பனாகிய துருபதன் நினைவு வந்தது. அவரிடம் சென்றால் நமக்கு பசுவும் கிடைக்கும், தன் குழந்தையையும் காப்பாற்றிக் கொள்ளலாம் என நினைத்தார். நினைத்தவாறே துருபத மஹாராஜாவிடம் சென்றார். துருபத மஹாராஜா சற்று செருக்கு நிறைந்தவராகக் காணப்பட்டார். நண்பர் துரோணரைப் பார்த்தும் அவரை அவர் ஒன்றும் பொருட்படுத்தவில்லை. முகம் கொடுத்தும் பேசவில்லை. இருப்பினும் துரோணரே அவரை "நண்பா" என அழைத்தார். அதைக்கேட்ட துருபதன், என்னே! நீ எனக்கு நண்பனா? நீயோ கேட்டு வாங்கி பிழைக்கும் ஒருவன். நானோ மஹாராஜா. உனக்கும் எனக்கும் இடையில் நட்பா என அகங்காரத்தோடு பேசினான். அதைக்கேட்டவுடன் அவருக்கு கோபம் வந்து விட்டது. தவச்சீலரான அவரை இப்படிப்பட்ட

வார்த்தைகள் எல்லாம் ஒன்றும் செய்யாது. ஏன் என்றால் கடும்தவம் இயற்றிய முனிவர். கோபதாபங்கள் எல்லாம் கடந்தவர். ஆனால் ஏனோ தெரியவில்லை அவர் மனதில் ஒரு நெருப்புப் பொறி கிளம்பியது. அது அப்படியே பெரிய தீயாக எரியத் தொடங்கியது. கோபத்தீயில் கொதித்துப் போயிருந்த துரோணர் ஒரு சபதம் எடுத்துக் கொண்டார். என்றைக்காவது ஒரு நாள் உனக்கு நிகராக நான் உயர்ந்து காட்டுவேன். உயர்ந்த நிலையிலே உன்னிடம் வந்து நட்பு செய்வேன் என சபதமெடுத்தார்.

தொடரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 60

**இடமிருந்து வலம் :**

1. கண்ணன்.....(3) செய் பலனை எதிர் பார்க்காதே! என்றார்
2. கண்ணனை பெற்ற தாய்......(3).
5. குருக்ஷேத்திரத்தில் நடந்தது.....(2)
6. கண்ணன் பிறந்த நகர்...(3)
9. கிருஷ்ணர் .....(2) "இதை" செய்வதில் வல்லவர்.
10. கண்ணனின் பெரிய தோழர்....(4)
13. திருமலையில் பக்தர்கள் .....(4) என்று அழைப்பார்கள்
14. கிருஷ்ணர் அருளிய பாடம்....(2)

**வலமிருந்து இடம் :**

8. கண்ணன் ....(3) அவதாரம்.
10. கிருஷ்ணரின் அத்தை....(3)
13. கண்ணனிடம் காதல் கொண்டவர்கள்.....(4)
15. சுதர்சன.....(5)
17. பாண்டவர்களின் குரு.....(4)
18. அனைத்து உயிர்களிலும் உள்ளவர்.....(5)

**மேலிருந்து கீழ் :**

1. மூன்று யோகங்களில் முதல் யோகம்....(3)
2. போர்க்களத்தில் ஓட்டியது....(2)
3. கண்ணனின் வேறு பெயர்.....(5)
4. "மது" என்ற அரக்கனை அழித்ததால் பெற்ற பெயர்.......(6)
7. இனிய காதலி......(2)
11. கண்ணனை வளர்த்த அன்னை......(3)
12. கண்ணன் ஓடி விளையாடியது .......(4)வனம்.
13. வளர்ந்த இடம் குழம்பி உள்ளது.....(4)

**கீழிருந்து மேல் :**

15. ஒலிக்கும் பாஞ்சஜன்யம்....(3)
16. கிருஷ்ணரின் மறுபெயர்....(4)
17. கண்ணன் அரசாண்ட நகர்.......(4)
18. கண்ணனின் அண்ணன்......(5)



புதிருக்கு விடை அறிய 41ம் பக்கம் பார்க்கவும்...

தொகுப்பு :
திரு. டி.ஆர். மனோகர், தஞ்சாவூர்,
99426 44807



# சங்கட நாசன கணேச ஸ்தோத்ரம்

### நாரத உவாச :

ப்ரணம்ய ஸிரஸா தேவம் கௌரீ புத்ரம் விநாயகம் |
பக்தா வாஸம் ஸ்மரேந் நித்யாயுஷ் காமார்த்த ஸித்தயே ||

ப்ரதமம் வக்ர துண்டம் ச ஏகதந்தம் த்விதீயகம் |
த்ருதீயம் க்ருஷ்ண பிங்காக்ஷம் கஜவக்த்ரம் சதுர்த்தகம் ||

லம்போதரம் பஞ்சமம் ச ஷஷ்டம் விகடமேவச |
ஸப்தமம் விக்னராஜம் ச தூம்ரவர்ணம் ததாஉஷ்டமம் ||

நவமம் பாலசந்த்ரம் ச தஸமம் து விநாயகம் |
ஏகாதஸம் கணபதிம் த்வாதஸம் து கஜானனம் ||

த்வாதஸைதானி நாமானி த்ரிஸந்த்யம் ய: படேந்நர: |
ந ச விக்னபயம் தஸ்ய ஸர்வஸித்தி கரம் பாம் ||

வித்யார்த்தீ லபதே வித்யாம் தனார்த்தி லபதே தனம் |
புத்ரார்த்தீ லபதே புத்ரான் மோக்ஷார்த்தீ லபதே கதிம் ||

ஜபேத் கணபதி ஸ்தோத்ரம் ஷட்பிர்மாஸை: பலம்லபேத் |
ஸம்வத்ஸரேண ஸித்திம் ச லபதே நாத்ர ஸம்ஸய: ||

அஷ்டாநாம் ப்ராஹ்மணாநாம் ச லிகித்வாய: ஸமர்பயேத் |
தஸ்ய வித்யா பவேத் ஸர்வா கணேஸஸ்ய ப்ரஸாதத: ||

இதி ஞ்ரீ நாரத புராணே சங்கட நாசன கணேச ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்



# ஸ்ரீகிருஷ்ண அஷ்டோத்ர சதநாமாவளி

ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய நம:
ஓம் கமலாநாதாய நம:
ஓம் வாஸுதேவாய நம:
ஓம் ஸநாதனாய நம:
ஓம் வஸுதேவாத்மஜாய நம:
ஓம் புண்யாய நம:
ஓம் லீலாமானுஷ விக்ரஹாய நம:
ஓம் ஸ்ரீவத்ஸகௌஸ்துப தராய நம:
ஓம் யசோதாவத்ஸலாய நம:
ஓம் ஹரயே நம: (10)
ஓம் சதுர்ப்புஜாத்தசக்ராஸி கதாசங்காத்யுதா யுதாய நம:
ஓம் தேவகீநந்தனாய நம:
ஓம் ஸ்ரீசாய நம:
ஓம் ஸ்ரீநந்தகோப ப்ரியாத் மஜாய நம:
ஓம் யமுனா வேகஸம்ஹாரிணே நம:
ஓம் பல பத்ர ப்ரியானுஜாய நம:
ஓம் பூதனாஜீவித ஹராய நம:
ஓம் சகடாஸுரபஞ்ஜனாய நம:
ஓம் நந்தவ்ரஜ ஜனாநந்தினே நம:
ஓம் ஸச்சிதானந்த விக்ரஹாய நம: (20)
ஓம் நவனீத விலிப்தாங்காய நம:
ஓம் நவனீதநடாய நம:
ஓம் அனகாய நம:
ஓம் நவனீத நவாஹாராய நம:
ஓம் முசுகுந்த ப்ரஸாதகாய நம:
ஓம் ஷோடசஸ்த்ரீஸஹஸ்ரேசாய நம:
ஓம் த்ரிபங்கீமதுராக்ருதயே நம:
ஓம் சுகவாகம்ருதாப்தீந்தவே நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் யோகினாம் பதயே நம: (30)
ஓம் வத்ஸவாடசராய நம:
ஓம் அனந்தாய நம:
ஓம் தேனுகாஸுரமர்த்தனாய நம:
ஓம் த்ருணீக்ருத த்ருணாவர்த்தாய நம:
ஓம் யமளார்ஜுன பஞ்ஜனாய நம:
ஓம் உத்தால தாலபேத்ரே நம:
ஓம் தமாலச்யா மலாக்ருதயே நம:
ஓம் கோப கோபீச்வராய நம:
ஓம் யோகினே நம:
ஓம் கோடிஸூர்ய ஸமப்ரபாய நம: (40)
ஓம் இளாபதயே நம:
ஓம் பரஞ்ஜ்யோதிஷே நம:
ஓம் யாதவேந்த்ராய நம:
ஓம் யதூத்வஹாய நம:
ஓம் வனமாலினே நம:
ஓம் பீதவாஸஸே நம:
ஓம் பாரிஜாதாபஹாரகாய நம:
ஓம் கோவர்த்தனாசலோத்தர்த்ரே நம:
ஓம் கோபாலாய நம:
ஓம் ஸர்வபாலகாய நம: (50)
ஓம் அஜாய நம:
ஓம் நிரஞ்ஜனாய நம:
ஓம் காமஜனகாய நம:
ஓம் கஞ்ஜலோசனாய நம:
ஓம் மதுக்னே நம:
ஓம் மதுராநாதாய நம:
ஓம் த்வாரகாநாயகாய நம:
ஓம் பலினே நம:
ஓம் ப்ருந்தாவனாந்தஸஞ்சாரிணே நம:
ஓம் துளஸீதாமபூஷணாய நம: (60)
ஓம் ஸ்யமந்தகமணேர்ஹர்த்ரே நம:
ஓம் நரநாராயணாத்மகாய நம:
ஓம் குப்ஜா க்ருஷ்ணாம்பர தராய நம:
ஓம் மாயினே நம:
ஓம் பரமபுருஷாய நம:
ஓம் முஷ்டிகாஸுர சாணூர மல்லயுத்த விசாரதாய நம:
ஓம் ஸம்ஸார வைரிணே நம:
ஓம் கம்ஸாரயே நம:



ஓம் முராரயே நம:
ஓம் நரகாந்தகாய நம: (70)
ஓம் அனாதி ப்ரஹ்மசாரிணே நம:
ஓம் க்ருஷ்ணாவ்யஸனகர்சகாய நம:
ஓம் சிசுபாலசிரச்சேத்ரே நம:
ஓம் துர்யோதன குலாந்தகாய நம:
ஓம் விதுராக்ரூர வரதாய நம:
ஓம் விச்வரூப ப்ரதர்சகாய நம:
ஓம் ஸத்யவாசே நம:
ஓம் ஸத்யஸங்கல்பாய நம:
ஓம் ஸத்யபாமாரதாய நம:
ஓம் ஜயினே நம: (80)
ஓம் ஸுபத்ராபூர்வஜாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் பீஷ்மமுக்தி ப்ரதாயகாய நம:
ஓம் ஜகத்குரவே நம:
ஓம் ஜகன்னாதாய நம:
ஓம் வேணுநாத விசாரதாய நம:
ஓம் வ்ருஷபாஸுர வித்வம்ஸினே நம:
ஓம் பாணாஸுரகராந்தகாய நம:
ஓம் யுதிஷ்டிரப்ரதிஷ்டாத்ரே நம:
ஓம் பர்ஹிபர்ஹாவஸம்காய நம: (90)
ஓம் பார்த்தஸாரதியே நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் கீதாம்ருத மஹோததயே நம:
ஓம் காளீயபணிமாணிக்யரஞ்சித ஶ்ரீபதாம்புஜாய நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் யக்ஞபோக்த்ரே நம:
ஓம் தானவேந்த்ர வினாசகாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் பரப்ரஹ்மணே நம:
ஓம் பன்னகாஸன வாஹனாய நம: (100)
ஓம் ஜலக்ரீடஸமாஸக்த கோபீவஸ்த்ரா பஹாரகாய நம:
ஓம் புண்ய ச்லோகாய நம:
ஓம் தீர்த்தபாதாய நம:
ஓம் வேதவேதாத்யாய நம:
ஓம் தயாநிதயே நம:
ஓம் ஸர்வபூதாத்மகாய நம:
ஓம் ஸர்வக்ரஹரூபிணே நம:
ஓம் பராத்பராய நம: (108)

ஶ்ரீகிருஷ்ண அஷ்டோத்ர சத
நாமாவளி சம்பூர்ணம்




25-07-2021 அன்று சாதுர்மாச தீக்ஷைக்குப் பின்னர் திருவேங்கடமுடையானை தரிசித்த ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகளுக்கும், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிகளுக்கும் பழங்களை அளிக்கின்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள்




16-07-2021 முதல் 24-07-2021 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் சாஸ்திர முறைப்படி நடைபெற்ற கனகாம்பரத்துடன் கூடிய கோடி மல்லிகை பூக்கள் மகா புஷ்ப யாகம். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே.செயலாட்சித்தலைவருடன் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலர்



அண்மையில் திருமலையில் நாத நீராஜன அரங்கில் நடைபெற்ற சுந்தரகாண்ட பாராயணம்



25-07-2021 அன்று அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற புஷ்பயாகத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர், திருப்பதி

**உமா வீட்டில் ஒரே கொண்டாட்டம். அவளுடைய உறவினர்கள் எல்லோரும் கூடி உள்ளார்கள்.**

உமா : நாம் இவ்வாறு ஒன்றிணைந்து பொழுது போக்குவது ஆனந்தமாக உள்ளது.

சேகர் : ஆமாம். இப்போது ஒரு பண்டிகை வந்தால் மிக அருமையாக இருக்கும்.

ரமா : ஏன் இல்லை? வரலட்சுமி விரதம் உள்ளதே!

ராமன் : அது பெண்களுக்கான பூஜை அல்லவா?

வாணி : அப்படி இல்லை. தம்பதியராக இருக்கலாம். எங்களுக்கு உதவிகள் புரியலாமே!

சுரேஷ்: அது சரி. நல்லது. கொஞ்சம் அந்த விரதத்தைப் பற்றி கூறுங்களேன்.

உமா: வரம் தரும் மகாலட்சுமியை துதிப்பதால் வரலட்சுமி பூஜை ஆகும்.

ரமா: சாருமதி என்ற பக்தை இந்த விரதத்தை மேற்கொண்டதால் அனைத்து நலனைப் பெற்றாள்.

வாணி: ஒரு முறை பார்வதி தேவியார் கொடுத்த சாபத்திலிருந்து விடுபட இந்த விரதம் மேற்கொண்டு விமோசனம் பெற்றார். இந்த விரதம் ச்ரவண மாதத்தில் வரும்.

**வரலக்ஷ்மி விரத தினத்தன்று அதி காலையில் எல்லோரும் தூய நீராடிய பிறகு...**

ரமா: நான் வாசல் தெளித்து "மா கோலம்" போட்டு விட்டேன்.

சேகர்: நான் வாயிலில் மாவிலை தோரணம் கட்டினேன்.

உமா: வந்து பாருங்கள். பூஜை அறையும், தேவியையும் பூக்களால் அலங்காரம் செய்து விட்டேன். பூஜை அறையில் கோல மும் போட்டாச்சு. பன்னீரும் தெளித்தாகி விட்டன.

வாணி: அந்த கலசத்தில் தூய நீர் நிரப்பி வாருங்கள் சேகர்!

சேகர்: சரி, அதன் பிறகு என்ன செய்ய வேண்டும்?

ரமா: குடுமி தேங்காயை மஞ்சள் இட்டு, குங்குமம் சந்தனம் அப்பி, மாவிலையை வைத்து தேங்காயை சொம்பு மேல் வைத்து கலசம் வைக்க வேண்டும்.

சேகர்: தண்ணீர் நிரப்பி விட்டேன். கலசம் வையுங்கள்.

உமா: வாழையிலையில் அரிசி பரப்பி, இந்த கலசம் வைக்க வேண்டும்.

ரமா: சிலர், தேவியின் திரு அழகு முகத்தையும் கலசத்தில் வைப்பார்கள். மிகவும் அழகாக இருக்கும்.

ராமன்: நாம் வாங்கிய புதிய ஆடைகள்–ரவிக்கை புடவையை அம்பாளுக்கு சாத்துங்கள்.

# வரலட்சுமி விரதம்



**திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி,**
**கேரளா, 9946128102**



ரமா: எவ்வளவு அழகாகக் காட்சி அளிக்கிறாள் அம்பாள்!

**எல்லோரும் ஆமாம்! என்றார்கள்.**

**பூஜை அறை விளக்கேற்றி, தூபம் இட்டு தெய்வீகமாகக் காட்சியளித்து, மணம் கமழ்ந்தது. பெண்கள், விரதம் இருப்பவர்கள் எதுவும் உண்ணவில்லை.**

ரமா: "ரக்ஷை கையிறு" எங்கே?

ராமன்: அதோ! அந்த மஞ்சள் கயிறா? சில இடங்களில் சிவப்பு கூட உள்ளது.

வாணி: ஆமாம். அந்த ரக்ஷையை தாயின் பக்கத்தில் வையுங்கள்.

**உமா அர்ச்சனையைத் துவங்கினாள்.**

*''பத்மாஸனே பத்மகரே ஸர்வ லோக பூஜிதே நாராயண ப்ரிய தேவி சுபப்ரீதா பவ ஸர்வதா''* **என்று அர்ச்சித்தாள்.**

ரமா: நான் பாடுகிறேன். "ஜெயலட்சுமி வர லட்சுமி..." என்ற அன்னமய்யா கீர்த்தனையை மிக அழகாகப் பாடினாள்.

**வாணி நான் சில முக்கிய சுலோகங்கள் கூறப் போகிறேன் என்று துவங்கி – கனகதாரா சுலோகம், லட்சுமி அஷ்டோத்ரம், அஷ்டலட்சுமி ஸ்தோத்திரம் மிக அருமையாகக் கூறினாள்.**

ராமன்: நான் போய், நைவேத்யத்திற்கான பண்டங்களை எடுத்து வரேன்.

**பல பக்ஷணங்கள் வைக்கப்பட்டன. அதில் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், சித்ரா அன்னம், பாயசம், சுண்டல், கேசரி, பஞ்சாம்ருதம் போன்றவற்றை "வரலட்சுமி தேவி" யின் முன் வைத்து நிவேதனம் செய்தாள் உமா.**

ரமா: இனி, "ரக்ஷை" கட்டிக் கொள்வோம்.

**மங்கையர் மூவரும் அதை கையில் கட்டிக் கொண்டார்கள்.**

சுரேஷ்: வாணி! நீ தீபாராதனை காட்டு.

**வாணி, முதலில் சிறிது புஷ்பங்களை போட்டு விட்டு தீபாராதனை காட்டினாள்.**

உமா: வாங்க, எல்லோரும் தம்பதி சமேதரராக தேவியை விழுந்து வணங்குவோம்.

**எல்லோரும் அவ்வாறே செய்தார்கள். அச்சமயத்தில் பக்கத்து வீட்டு அம்புஜம் மாமி வந்தாள்.**

ரமா: வாங்கோ மாமி. இப்போ தான் பூஜை முடிந்தது. தாம்பூலம் வாங்கிக்கோங்கோ!

**மாமி காலில் எல்லோரும் விழுந்து, ஆசிர்வாதம் பெற்று, தாம்பூலம் கொடுத்தார்கள். அந்த மாமி மிகவும் மகிழ்ந்தாள். அவள் சற்று ஏழ்மையில் வாழ்பவள்.**

ராமன்: உமா! நாம் பூஜையில் வைத்த புது துணிகள், புடவை, ரவிக்கை, பட்டு பாவாடையை கொண்டு வா.

**உமா, எடுத்துக் கொண்டு வந்தாள்.**

ராமன்: மாமி, இது தேவிக்கு சாற்றியது. இதை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். இந்த பட்டுப் பாவாடையை உங்கள் பேத்திக்கு கொடுங்கள்.

**மாமி மிகவும் சந்தோசம் அடைந்தாள்.**

வாணி: பிரசாதம் எடுத்துக்கோங்கோ மாமி!

சேகர்: மாமி, நீங்க பெரியவங்க, இந்த விரதத்தின் மகிமை, பலன் மற்றும் தேவியின் சிறப்பை சொல்லுங்களேன்! கேட்க ஆவலாக இருக்கு!

மாமி: நான் பாக்யம் பெற்றேன். அந்த வரலட்சுமியின் பெருமையை கூறுவதற்கு. "வரம் தரும் லட்சுமி" வரலட்சுமி ஆவாள்.





உமா: மகாலட்சுமி தேவியே வரலட்சுமி தானே!

மாமி: ஆமாம். லக்ஷ்மி, சரஸ்வதி, துர்கை ஆகிய மூவரும் வெவ்வேறு வடிவம், ஆனால் ஒருவரே!

ரமா: ஒருவரில்லாமல் மற்றொன்று சிறக்காது. ஒருவருக்கு கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றும் அவசியமாகும்.

வாணி: சரியாக சொன்னாய். தாய் மகாலட்சுமியே அஷ்டலட்சுமியாகவும், துர்கா – நவ துர்கையாகவும் அருள்பாலிக்கிறாள்.

மாமி: மிகச் சரியாக சொன்னீர்கள். இந்த வரலட்சுமி விரதத்தினால் நமக்கு அஷ்ட ஐச்வர்யங்களும் கிட்டும்.

ரமா: ஆதி லட்சுமி, தன லட்சுமி, தைர்ய லட்சுமி.

உமா: சௌபாக்ய லட்சுமி அல்லது கஜ லட்சுமி, விஜய லட்சுமி, தான்ய லட்சுமி

வாணி: சந்தான லட்சுமி, வித்யா லட்சுமி என்று நாம் அஷ்டலட்சுமி ஸ்துதியில் போற்றுகிறோம்.

மாமி: ஆமாம். ஆதிலட்சுமி நம்மை காப்பவளாக வும், தனலட்சுமி தனத்தை கொடுப்பவளாக வும், தான்ய லட்சுமி – உலகத்தில் அன்ன அபிஷேகத்திற்காகவும், தைர்ய லட்சுமி – வீரத்திற்காகவும், சௌபாக்ய லட்சுமி – சௌபாக்யத்திற்காகவும், விஜய லட்சுமி – வெற்றிக்காகவும், சந்தான லட்சுமி – குழந்தை செல்வத்திற்காகவும், வித்யா லட்சுமி – கல்விக்காகவும் விளங்குகிறாள்.

ரமா: அஷ்டலட்சுமி இருந்தால் வாழ்வில் எல்லாவிதமான நன்மையும் ஏற்படும்.

உமா: "சௌபாக்ய லட்சுமி" அல்லது "கஜ லட்சுமி" என்று போற்றுவார்கள்.

வாணி: ஆமாம். "கஜ லட்சுமி" தாயார் பாற்கடலில் வரும் போது பொன்னாகத் திகழ்ந்தாள். தேவர்கள் அனைவருக்கும் இழந்த செல்வத்தை கொடுத்தவள்.

மாமி: இந்த வரலட்சுமி நன்நாளில் நாம் எல்லா வித நன்மைகள் பெற இந்த இரு சுலோகத்தை கூறுவோமாக.

*"ஸர்வ மங்கள மாங்கல்யே*
*சிவே ஸர்வார்த்த ஸாதிகே*
*சரண்யே த்ரயம்பகே தேவி*
*நாராயணி நமோஸ்துதே!*

*"யா தேவி ஸர்வ பூதேஷு மாத்ருரூபேண*
*ஸன்ஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை*
*நமஸ்தஸ்யை நமோஸ்துதே!"*

ரமா: இன்று மாலை நாங்கள் "ஸ்ரீஸ்துதி", "தேவி மஹாத்மியம்", "லலிதா சஹஸ்ர நாமம்", "அபிராமி அந்தாதி" பாராயணம் செய்யப்போகிறோம். தாமும் வர வேண்டும்.

மாமி: மிக சந்தோஷம்! அவசியம் வருகிறேன். தேவியின் அருள் பெருவதற்காக!



# கல்வி வரமருளும் ஸ்ரீஹயக்ரீவ பெருமாள்



நெய்வாசல் நெடுஞ்செழியன்,
சிதம்பரம், 94422 05862

திருவஹிந்தபுரம் ஸ்ரீஹேமாம்புஜவல்லித் தாயார் உடனுறை ஸ்ரீதேவநாதபெருமாள் ஆலயம், அயிந்தை என்னும் திருவயிந்தை முற்கால நடு நாட்டின் ஓர் உட்பிரிவாகும். அஹீந்திரன் என்னும் ஆதி சேஷன் இந்த நகரத்தை உருவாக்கியதால் அது அஹிந்த்ரபுரம் என்றழைக்கப்பட்டது. கருடன் வழி பட்ட தலம். குரு, ராகு, கேது தோஷமுள்ளவர்கள் இங்குள்ள பெருமாளை வணங்கினால் தோஷ நிவர்த்திப் பெறலாம். நாகதோஷம் நீக்கக் கூடிய சக்தி வாய்ந்த தலங்களில் ஒன்றாகவும் இது திகழ்கிறது. கருடாழ்வாராலும், ஆதிசேஷனாலும் வணங்கப்பட்ட இத்தல இறைவனை வழிபட அனைத்து விதமான நாக தோஷங்களும் நீங்கும். மேலும் இங்குள்ள கருட, சேஷ, சந்திர தீர்த்தங்கள் பல நோய்களை தீர்க்கும் வல்லமைக் கொண்டவை.

திராவிட கட்டிடக்கலையில் கட்டப்பட்ட இக் கோயில் ஆறாம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தது. தற்போதுள்ள கோயில் பிற்கால சோழர்கள் காலத் தில் கட்டப்பட்டதாகும். தொடர்ந்து பாண்டியர்கள், ஹொய்சாளர்கள் மற்றும் விஜய நகர மன்னர்களால் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவாக்கப்பட்டது. இக்கோயிலில் விக்ரமசோழன் (1118–1135), மூன்றாம் ராஜராஜன் (1216–1256), ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251–1268), விக்ரம பாண்டியன், மூன்றாம் வீரபாண்டியன், விஜயநகர அரசர் அச்சுததேவராயர் (1529–1542) மற்றும் காடவர் குல கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் மேற்கொள்ளப் பட்ட திருப்பணிகள் மற்றும் வழங்கப்பட்ட கொடை களின் விவரங்கள் ஐம்பது கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள கோபுரம் காடவர்குல கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் கட்டப் பட்டது. இந்த ஆலயத்துடன் இணைந்தே ஸ்ரீஹயக்ரீ வருக்கான ஆலயம் உள்ளது.

## ஸ்ரீஹயக்ரீவ பெருமான்:

குதிரைமுகம், மனித உடல், ஆயிரங்கோடி சூரியர்களையும் மிஞ்சும் ஒளி, சூரிய சந்திரர்களை இரு கண்களாகவும், கங்கை, சரசுவதி ஆகியோரை அந்த கண்களின் இமைகளாகவும் கொண்டு சங்கு சக்கரதாரியாக காட்சியளிப்பவரே ஸ்ரீஹயக்ரீவ பெருமான். கல்விச் செல்வம் மட்டும் அவரது இறுதி வரை விலகாது உடனிருக்கும். அந்த கல்விக்கு அதிபதியாக அனைவரும் சரஸ்வதி தேவியை வணங்குகிறோம். ஆனால், அந்த சரஸ்வதிக்கு ஒரு குரு உண்டு. அவரே ஞானகுருவான ஹயக்ரீவ பெருமான். பரிமுகன் என்றொரு மற்றொரு பெயராலும் இவர் அழைக்கப்படுகிறார்.

## ஸ்ரீஹயக்ரீவர் அவதாரம்:

பிரம்மனிடமிருந்த வேதங்களைப் பறித்துச் சென்று பாதாளத்தில் ஒளித்துவைத்தனர். அசுரர்கள் வேதங்கள் இல்லாததால் சிருஷ்டி நின்று அனைத்தும் ஸ்தம்பித்தது. இதனால் உலகை இருள் சூழ்ந்தது. செய்வதறியாது தவித்த பிரம்மா மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார். வேதங்களை மீட்க பாதாள உலகம் வந்த பெருமாள் அங்கே அசுரர்கள் குதிரை வடிவில் இருப்பதைக் கண்டார். உடனே தானும் குதிரை முகம் கொண்டு அவர்களுடன் போரிட்டு வேதங்களை மீட்டு பிரம்மனிடம் கொடுத்தார். அசுரர்கள் கைப்பட்டதால் தங்களது பெருமை குன்றியதாகக் கருதிய வேதங்கள் தங்களை புனிதமாக்கும்படி வேண்டின.

குதிரை முகத்துடன் இருந்த பெருமாள் வேதங் களை எடுத்து உச்சிமுகர அவரின் மூச்சுக்காற்றுப் பட்டு வேதங்கள் புனிதமடைந்தன. இரு

அரக்கர்களிடமிருந்து வேதங்களை மீட்டெடுக்க விஷ்ணு எடுத்த இந்த திவ்ய சொரூபத்தை அவரின் பதினான்காவது அவதாரமாக வைணவ பெரியோர்கள் கூறுகின்றனர்.

### கல்வியும் செல்வமும்:

மது கைடபர்களுடன் போரிட்டு வேதங்களை மீட்டபின்னரும் ஹயக்ரீவ பெருமானின் உக்கிரம் குறையவில்லை. அதை தணிய வைக்க பலவிதமான முயற்சிகள் செய்தும் தோல்வியடையவே இறுதியாக லட்சுமியை அவர் மடியில் அமர்த்திருப்தால் லட்சுமி ஹயக்ரீவர் என்றழைக்கப்பட்டார். வேதங்களை மீட்டவர் என்பதால் அவர் கல்வி தெய்வமாகிறார். கல்வி உள்ள இடத்தில் லட்சுமியாகிய செல்வமும் சேரும் என்பதால் லட்சுமியை இடது தொடையில் அமர்த்தியிருக்கிறார்.

### ஸ்ரீஹயக்ரீவரின் தோற்றம்:

எப்போதும் பளீர் வெள்ளை நிறத்தில் இருப்பார். சங்கு, சக்கரம், புத்தகம், மணி மாலை தரித்தவராக லட்சுமி தேவியரோடு கூடியவராகத் திகழ்கிறார். உபநிஷத்திலும் ஹயக்ரீவர் பற்றி கூறப்பட்டுள்ளது. மகா பாரதம், தேவி பாகவதம், ஹயக்ரீவ கல்பம் போன்ற நூல்கள் ஹயக்ரீவரின் பெருமைகளை பேசுகின்றன.

### திருவஹிந்திரபுர ஔஷதாசலம்:

திருவஹிந்திபுர திவ்யதேசத்திலுள்ள மலையின் பெயர் ஔஷதாசலம் (மருந்து மலை) என்பதாகும். மயக்கமடைந்த லட்சுமணனை எழுப்புவதற்காக அனுமன் சஞ்சீவி மலையை இவ்வழியே தூக்கிச் சென்றபோது ஹயக்ரீவரை வணங்கினார் என வால்மீகி இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.

அச்சமயம் அம்மலையிலிருந்து விழுந்த சிறுபகுதியே தற்போது ஹயக்ரீவர் அமர்ந்து அருள் பாலிக்கும் மலைப்பகுதி என்று கூறப்படுகிறது. இங்கு பிரம்மா தவம் செய்த தால் பிரம்மாச்சலம் என்ற பெயரும் இதற்குண்டு. இம்மலை சன்னதியில் ஸ்ரீஹயக்ரீவர் லட்சுமி தேவியை மடியில் அமர்த்திக்கொண்டு உட்கார்ந்த நிலையில் அருள்பாலிக்கிறார். இம் மலையிலிருந்துதான் வைணவ வேதாந்த தேசிகர் தவம் செய்து ஸ்ரீஹயக்ரீவரையும் கருடனையும் நேரில் தரிசிக்கும் பேறுபெற்றார்.

### ஸ்ரீஹயக்ரீவர் உபாசனை:

கல்விக் கடவுளான ஹயக்ரீவரை *“ஞானானந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்கிரீவ முபாஸ்மஹே”* என்ற ஹயக்ரீவ பஞ்ஜர ஸ்தோத்திரத்தைப் பாடி வழிபட வேண்டும். இந்த பாடலுக்கு “ஞானமும் ஆனந்த மயமானவரும், தூய்மையான ஸ்படிகம் போன்ற தேகத்தை உடையவரும், சகல கல்வி கலைகளுக்கு ஆதாரமானவருமான ஸ்ரீஹயக்ரீவரை நான் உபாசிக்கிறேன்” என்று பொருளாகும்.

பக்தர்கள் கேட்பதை உடனடியாக அளிக்கக் கூடியவர் ஸ்ரீஹயக்ரீவ பெருமான். குதிரை முகத்துடன் லட்சுமியை தனது இடதுபக்க தொடையில் அமர்த்திக் கொண்டு, ஸ்படிகம் போன்ற உடலுடன் தாமரை மலர்மீது அமர்ந்துள்ள ஸ்ரீஹயக்ரீவரை வழிபடுவோரின் அனைத்து கஷ்டங்களும் நீங்குவதுடன் கலை மற்றும் கல்வி போன்ற நிலையான ஞானத்தையும் நிறைந்த செல்வத்தையும் ஒரு சேரப்பெற்று இன்புறலாம். அவர் அமர்ந்துள்ள மலை ஔஷதகிரி என்பதால் உடல் நோய்கள் தீர்க்கும் பரிகாரத் தலமாகவும் இது விளங்குகிறது. தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் கடலூர் நகரிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் இத்திருத்தலம் உள்ளது.



### ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -27

*கேயம் கீதா நாம சஹஸ்ரம் த்யேயம்*
*ஸ்ரீபதி ரூபம் அஜஸ்ரம்।*
*நேயம் ஸஜ்ஜன ஸங்கே சித்தம் தேயம்*
*தீநஜனாய ச வித்தம் ॥*

**நற்கதியை அடைய விரும்புபவர்கள் தினந்தோறும் பகவத் கீதையையும், விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தையும் பாராயணம் செய்ய வேண்டும். எப்போதும் பகவானுடைய உருவத்தினையே மனத்தில் தியானம் செய்த வண்ணம் இருக்க வேண்டும். நல்லவர்களுடைய சேர்க்கையிலேயே மனதினை செலுத்த வேண்டும். வறியவர்களுக்கு (ஏழைகளுக்கு) தங்களால் இயன்றதை கொடுத்திட வேண்டும்.**

– திரு. சீதாராமன், சென்னை.

# குணநல ஒழுக்கமே குமரன் வழிபாடு



திரு. சிவ.சதீஸ்குமார்,
பொள்ளாச்சி,95248 29123.

உலகில் எந்தமொழிக்கும் இல்லாத ஒரு தனிப் பெருமை தமிழ்மொழிக்கு உண்டு. அது மொழிக் கென்று தனியாக ஒரு கடவுளைப் பெற்றிருப் பது ஆகும். தமிழ்க்கடவுளாக முருகப் பெருமான் விளங்குகிறார்.

குறிஞ்சி நிலத்துக் கடவுளாக விளங்கும் இவரை *''சேயோன் மேய மைவரை உலகமும்''* என்று தொல்காப்பியம் போற்றுகிறது. முருகனின் பன்னிரு கைகள் பன்னிரு உயிரெழுத்துக்களையும், பதி னெட்டுக் கண்கள் பதினெட்டு மெய்யெழுத்துகளை யும், ஆயுதமாகிய வேல் ஆயுத எழுத்தையும் குறிக் கிறது என்பர். “முருகு” என்ற பெயரானது தமிழ் மொழியில் மெல்லின, இடையின மற்றும் வல்லின எழுத்துக்களிலிருந்து எடுத்து சூட்டப்பட்டுள்ளது. அத்துடன் முருகப்பெருமானே இரண்டாவது தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராகவும் விளங்கியுள்ளார்.

இவரைத் தமிழ்ச் சொற்களால் போற்றாமல், திட்டினால் கூட நல்வாழ்வு தருவார் என்று அருணகிரி நாதர்,

*“மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்*
*வைதாரையும் அங்கு வாழவைப்பான் போய்ய வாரணம்போல்*
*கைதான் இருபதுடையான் தலைபத்தும் கத்தரிக்க*
*எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே”*

என அலங்காரம் செய்கிறார். மேலும், சிவ பெருமானுக்கு பிரணவ மந்திர உபதேசத்தையும் முருகன் தமிழ்மொழியில் தான் கூறியுள்ளார். இதனை,

*“கொன்றைச் சடையாருக்கு ஒன்றைத் தெரிய*
*கொஞ்சித் தமிழால் பகர்வோனே”*

என்று திருப்புகழில் பதிவு செய்கிறார்.

இதன் மூலம் முருகப்பெருமான் தனித்தமிழ்க் கடவுள் என்பது தெளிவாகிறது.

மேலும், திருமுருகாற்றுப்படை முருகனின் ஆறு படை வீடுகளைப் பற்றி பதிவுசெய்துள்ளது. ஆறு படை வீடுகளும் ஒவ்வொரு தனிச்சிறப்பு பெற்றவை யாகும். குடைவரைச் சிலைக்கு திருப்பரங்குன்றமும், கடலின் அலைக்கு திருச்செந்தூரும், குன்றான மலைக்கு பழனியும், அமைதியான நிலைக்கு திருத் தணியும், பாடம் கற்பிக்கும் கலைக்கு சுவாமிமலை யும், அழகிய சோலைக்கு பழமுதிர்ச்சோலையும் விளங்குகின்றன. அதில் முருகன் சூரபதுமனை தடிந்ததை,

*“பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு*
*சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்”*

என்று நக்கீரர் பதிவு செய்கிறார். அப்படி சூரனை வதைத்த நாளே “சூரசம்ஹாரம்” என்று கொண்

டாடப்படுகிறது. சூரபதுமன் சிவபெருமானிடம் “தன் சக்தியல்லாது வேறு சக்திகளால் அழிவே இல்லை” என்ற வரம்பெற்ற ஆணவத்தால் தேவர்களைத் துன்புறுத்தினான். துன்பம் தாங்காத தேவர்கள் சிவ பெருமானிடம் முறையிட தனது நெற்றிக் கண்ணைத் திறந்து முருகனைப் பிறப்பித்தார். அதனை,

*‘‘அருவமும் உருவமும் ஆகி, அநாதியாய்ப்*
*பலவாய் ஒன்றாய்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு*
*அது ஓர் மேனியாகி,*
*கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்*
*பன்னிரண்டும் கொண்டே*
*ஒருதிருமுருகன் வந்து, ஆங்கு உதித்தனன்*
*உலகம் உய்ய’’*

என்று கந்தபுராணம் சுட்டுகிறது. இதில் முருகன் சிவபெருமானின் அவதாரமே என்பது புலனாகிறது. அழகாய் இருப்பதால், “முருகன்” என்றும், தருப்பை வனத்தில் தோன்றியதால் “சரவணன்” என்றும், கார்த் திகைப் பெண்பால் உண்டதால் “கார்த்திகேயன்” என்றும், ஆறுமுகம் உடையதால் ‘‘சண்முகன்’’ என்றும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

கந்த சஷ்டி விழாவின் ஆறாவது நாள் சூரபது மன் தலைகீழான மாமரவடிவத்தில் வர, முருகன் வேலாயுதத்தால் பிளந்து சேவலும் மயிலுமாகக் கொண்டார். அனைத்து ஆயுதங்களும் அழிக்கக் கூடியவை. ஆனால், வேலாயுதம் மட்டும் காத்து நின் றது. இது தீமை புரிந்த சூரனை அழிக்காமல் சேவலும் மயிலுமாக மாற்றியது. அதனால்தான் மனிதர்க ளுக்கு ‘‘வேலாயுதம்’’ என்று பெயர் வைக்கப் படுகிறது.

முருகனையே தனிப்பெருங்கடவுளாக வணங் கும் கௌமாரம் சமயத்தில் வேலினைத் தனியே வழி படுவது பழக்கத்தில் உள்ளது. இந்த வேலானது ஆழ்ந்து அகலமாக கூர்மையுடன் இருப்பது மனித னுக்கு அறிவு எப்படியிருக்க வேண்டும் என்பதன் குறியீடு ஆகும்.

சூரனை தன்மை மாற்றம் செய்த திருச்செந்தூ ரில் பன்னீர் இலையில் திரு நீறு வழங்கப்படுகிறது. இந்த இலையானது வலிப்பு, காசம், கயம், குட்டம் போன்ற நோய்களைத் தீர்க்கும் மருத்துவத் தன்மை யுடையது. தீராத வயிற்றுவலியை இலைத்திருநீறு போக்கியதால் ஆதிசங்கரர் இங்கு “சுப்ரமணிய புஜங் கம்” என்ற நூலைப் பாடியுள்ளார்.

இவ்விலையிலுள்ள பன்னிரு நரம்புகள் முருக னின் பன்னிரு கைகளைக் குறிப்பதாகும். இவ்விலை யில் விபூதி பெறுவது முரு க னின் பன்னிரு கைகளில் பெற்றதற்கு இணையாகக் கருதப்படுகிறது.

ஆறுநாள் விரதமா னது குழந்தைப்பேற்றை நல்குவதாகும். “சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்” என்பது பழமொழி. ஆனால் இதன் உண்மை விளக்கம் “சஷ்டியில் இருந்தால் அகப்பை யாகிய கருப்பையில் குழந்தை வரும்” என்பது.

இந்த முருக வழிபாடு குழந்தையை மட்டுமே நல்காமல் நல்ல குணத்தை யும் நல்குவதாக உள்ளது. எவ்வளவுதான் அறிவு இருந்தாலும் அது ஆக்கு வதற்காகப் பயன்பட வேணும். அழிப்பதற்கு அல்ல என்பதை உணர்த் துகிறது.

முருகனிடம் என்ன வேண்ட வேண்டும் என் பதை, பரிபாடல்

*‘‘ ... யாம் இரப்பவை*
*பொருளும் பொன்னும்*
*போகமும் அல்ல நின்பால்*
*அருளும் அன்பும்*
*அறனும் மூன்றும்’’*

என்கிறது. இவ்வா றான குணத்தையும் கொடுப்பதே குமரன் வழிபாடு.








# திருமலை அனந்தாழ்வான் இயற்றிய "கோதா சதுச்லோகீ"

**உ.வே. டாக்டர் அனந்த பத்மநாபாசாரியர் ஸ்வாமி,**
**சென்னை, 99620 11293.**

சுவாமி இராமாநுஜர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்திருந்த காலத்தில், சிஷ்யர்களுக்கு *"சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து"* என்கிற திருவாய்மொழி பாசுரத்திற்கு விளக்கம் கூறிக்கொண்டிருந்தார். அப்போது "புஷ்ப மண்டபமான திருவேங்கட மலையானுக்கு, மாலாகாரரைப் போலே புஷ்ப கைங்கர்யம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் இங்கு யாரேனும் உள்ளீர்களா?" என்று தன் மனதில் உள்ள ஆசையை சிஷ்யர்களிடம் தெரிவித்தார். திருமலையில் கைங்கர்யம் என்றதும் சிஷ்யர்கள் கூட்டம் அமைதி காத்தது. சிஷ்யர்களுக்கு இராமாநுஜரை விட்டுப் பிரிய மனமில்லை என்பது ஒரு காரணம். மேலும், திருமலை யில் வீசும் குளிர் காற்று, கொடிய காட்டு மிருகங்கள், திருமலைக்கு செல்வதென்பதே ஒரு கடினமான செயல் என்ற பல காரணங்களால், சிஷ்யர்கள் பயந்து அமைதி காத்தனர். "இவ்வளவு சீடர்கள் இருந்தும், திருமலை யானுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்ய ஒருவரும் இல்லையா?" என்று இராமாநுஜர் கவலை கலந்தபடி சிஷ்யர்களை மீண்டும் பார்த்தார்.




அப்பொழுது அந்த அமைதியை குலைக்கும் வண்ணம், "ஆசார்யன் அனுகிரகத்தினால், எம்பெருமான் நியமனமாக ஏற்று அடியேன் திருமலைக்குச் சென்று புஷ்ப கைங்கர்யம் செய்கிறேன்" என்ற குரல் வந்த திசையை நோக்கினார் இராமாநுஜர். இரு கைகளையும் கூப்பி எழுந்து நின்றபடி அனந்தன் என்ற சீடர் ஆசார்யன் மனதில் உள்ள ஆசையை நிறைவேற்ற ஆவலாக காத்திருந்தார்.

மகிழ்ந்து போன இராமாநுஜர், அவரை அருகில் அழைத்து, "நீர் தான் ஆண் பிள்ளை" என்று மகிழ்ச்சி பொங்க கூறினார். அன்றிலிருந்து "அனந்தாண் பிள்ளை" என்றும், "அனந்தாழ்வான்" என்றும் அவரை அழைத்தனர். கர்நாடகத்தில் மைசூர் பகுதியில் காவேரி நதிக்கரையில் உள்ள சிறுபுத்தூர் என்கிற கிரங்கனூரில், சித்திரை சித்திரையில் அவதரித்த அனந்தாழ்வான், அதே சித்திரை சித்திரையில் அவதரித்த மதுரகவி ஆழ்வாரைப் போலே ஆசார்ய பக்தியில் திலைத்திருந்தார்.

ஆசார்யனின் விருப்பமே தன் விருப்பம் என்று அவரின் கட்டளையை ஏற்றுக் கொண்டு, திருமலையை நோக்கி புறப்பட்ட அநந்தாழ்வானும் அவர் மனைவியும், திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு ஓர் அழகிய நந்தவனம் அமைத்தனர். தீர்த்தத்திற்காக "ஸ்ரீராமாநுஜர் புஷ்கரணி" என்னும் குளத்தையும் அமைத்தனர். ஸ்ரீநிவாசனே ஒரு சிறுவன் ரூபமாக வந்து இந்த குளம் வெட்டும் சமயத்தில் இந்த தம்பதிகளுக்கு உதவி புரிந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் அனந்தாழ்வான் சுவாமி இராமாநுஜரின் திருவுள்ளப்படி திருமலையப்பனுக்கு நித்யம் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார்.

திருமலையப்பனுக்கு பல கைங்கர்யங்கள் செய்த அனந்தாழ்வான் மதிளும், கோபுரமும் கட்ட எண்ணினார். அப்பொழுது வழியில் பல கிளைகளையுடைய செண்பக மரம் ஒன்று மதிள் கட்டத் தடங்கலாய்க் குறுக்கே நிற்க, என்ன செய்வது என்று யோசித்தார். "திருவேங்கடம் என்னும் எம்பெருமான் *"பொன்மலையில் ஏதேனுமாவேனே!"* என்று ஸ்ரீகுலசேகராழ்வார் பாடியுள்ளது அவருக்கு நினைவிற்கு வந்தது. "ஆழ்வார் செண்பக மரமாக அவதரித்

திருக்கலாமே, என்ன செய் வது” என்று சிந்தையில் ஆழ்ந்தார். திருமலையில் உள்ள மரம், செடிகொடிகள், பிராணிகள் அனைத்தும் பரமபதத்திலிருந்து வந்தவை; நித்ய சூரிகள் அம்சம் என்று புராணங்கள் கூறுகின் றன. ஆகையால் செம்பக மரத்தை வெட்டக்கூடாது என்று முடிவெடுத்தார். அன்றிரவு பெருமாளை தியானித்து, “மர உருவில் வாசம் செய்யும் நித்ய சூரியே! பெருமாளுக்குக் கட்டும் மதிள் வழியிலிருந்து சிறிது ஒதுங்கி அடியோங்களுக்கு மதில் கட்ட அருள் புரிய வேண்டும்” என்று பிரார்த்தனை செய்து உறங்கினார். காலையில் எழுந்த பொழுது, அந்த செண்பக மரம் மதிள் கட்டும் வழியிலிருந்து ஒதுங்கி நிற்பதைக் கண்டு, மகிழ்ந்து, கோணலின்றி மதிளைக் கட்டி முடித்தார். இன்றும் இந்த மதிள் “செண்பக மதிள்” என்று வழங்கப்படுகிறது.




இவ்வண்ணம் தன் ஆசார்யனின் மனதில் உள்ள ஆசையை பூர்த்தி செய்ய திருமலைக்குச் சென்ற அனந்தாழ்வான், திருஆடிப்பூரத்தன்று திருமலையில் அவருடைய திருமாளிகையில் பரமபதித்தார். இன்றும் அவர் திருமாளிகையிருந்த இடத்தில், நாம் ஒரு மகிழ மரத்தை சேவிக்கலாம். திருமலையில் அனந்தாழ்வான் ஒரு மகிழ மரமாக தனது புஷ்ப கைங்கர்யத்தை இன்றும் செய்து வருகிறார் என்பதே அவருடைய ஆசார்ய பக்தியின் பெருமையை பறைசாற்றுகிறது.



அனந்தாழ்வனின் மகிழ மரம் இருக்கும் திருமாளிகை மற்றும் நந்தவனத்திற்கு திருமலையப்பன் வருடந்தோறும் திருஆடிப் பூரத்தன்றும், பிரம்மோத்ஸவம் முடிந்த மறுநாளும் உத்சவம் கண்டு எழுந்தருள்வதும், மரியாதை செய்யப்படுவதும் அவரின் மகத்துவத்தை நன்கு விளக்குகிறது.

இவர் வேங்கடேச இதிகாஸ மாலை என்னும் நூலை இயற்றியுள்ளார். அனந்தாழ்வானுக்கு திருமலையப்பன் மீது அளவு கடந்த பிரியம் என்பது ஒரு புறமிருக்க, ஆசார்யன் இராமாநுஜர் மீதும், இராமாநுஜரை அண்ணாவாக கருதிய கோதா பிராட்டியின் மீதும் இவருக்கு அலாதியான பக்தி கலந்த அன்பு. அந்த பக்தியின் வெளிப்பாடே, இவர் இயற்றிய இராமாநுஜ சதுச்லோகீ மற்றும் கோதா சதுச்லோகீ என்னும் இரண்டு துதிகளாகும்.

விஷ்ணு சித்தன் என்னும் பெரியாழ்வாரின் மகளாக துளசி வனத்தில் திருவாடிப் பூரத்தன்று பிறந்தவள் சூடிக் கொடுத்த நாச்சியார் என்னும் ஆண்டாள். திருவேங்கடவனுக்கு பூமாலை கைங்கர்யம் செய்த அனந்தாழ்வான், எம்பெருமானை தன் பாமாலை மற்றும் பூமாலையினால் கட்டிய கோதா தேவியை, கோதா சதுச்லோகீ என்னும் நான்கு சுலோகங்கள் உள்ள பாமாலை கொண்டு போற்றியுள்ளார்.

கோதா தேவியை புகழும் இந்த ஸ்தோத்திரத்தை நித்ய பாராயணம் செய்து அவளுடைய அனுகிரகத்தையும், அவளது மணாளனான ரங்கநாதனின் அனுகிரகத்தையும் நாம் பெறுவோமாக.

தொடரும்...

**புராணவரலாறு :**

ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கோயில் இது. அநந்தசயன மகாத்மியம் கூறுகிறது. கலியுகம் தொடங்கி – 950–ம் நாள் .... அந்தக்காலத்தில் இந்தப் பிரதேசம், "ஆதர்த்த நாடு" என்று வழங்கி வந்தது. இங்கு திவாகரரிஷி பகவானைக் குறித்து கடுமையாகத் தபஸ் செய்ய, பகவான், இரண்டு வயதுக் குழந்தையாக இவருக்குத் தரிசனம் கொடுத்தான். குழந்தையின் கொள்ளை அழகில் மகரிஷி மயங்கினார். தன்னுடனேயே வசிக்குமாறு குழந்தையை வேண்டினார். குழந்தை நிபந்தனை விதித்தது; தன்னுடைய மனம் கோணாமல் ரிஷி நடந்து கொள்ளும் வரை அவரிடம் இருப்பதாகவும், மாறாக, கண்டித்தால் அந்தச் சமயத்திலேயே பிரிந்து போய்விடுவதாகவும் நிபந்தனை. ரிஷி சந்தோஷமாக ஒப்புக் கொண்டார். குழந்தையின் இளமை விளையாட்டுக்களில், சொக்கி, மனம் மகிழ்ந்து பேரின்பமே இதுதான் என்று மகரிஷி, குழந்தையை விட்டுக் கணநேரமும் பிரியாது இருந்தார்.

காலம் கழிந்தது. இப்போது ஒரு இடையூறு வந்தது. ஒருநாள் ரிஷியின் ஆராதனத்தில் உள்ள சாளக்ராமத்தை, குழந்தை எடுத்து வாயில் வைத்துக் கடித்தது. ரிஷிக்கு மிகவும் கோபம். ஆராதனத்தில் உள்ள சாளக்ராமத்தைத் தொடலாமா? தொட்டது மாத்ரமல்லாமல் எடுத்துக் கடித்தது. முனிவர் மிகவும் கோபத்துடன் குழந்தையைக் கண்டித்தார். இது தான் சமயம் என்று, குழந்தை, ரிஷியை விட்டு விட்டு ஓடத் தொடங்கியது. ரிஷியால், குழந்தையின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவரும் பின்னாலேயே ஓடினார்; ரிஷிக்கு உணவு இல்லை; உறக்கம் இல்லை; "என்னை விட்டுப் போகாதே" என்று பலமுறை கத்திக் கொண்டே பின்தொடர்ந்து ஓடினார்.

குழந்தை திரும்பிப் பார்த்தது "என்னைப் பார்க்க வேண்டுமானால் அனந்தன் காட்டுக்கு வருக" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டது. ரிஷி, நித்ய கர்மானுஷ்டானங்களை மறந்தார்; மேற்குக் கடற்கரை ஓரம்; குழந்தை ஓடுகிறது; பெரிய காடு... அடர்ந்த காடு ஒரு இலுப்பை மரம். குழந்தை அந்த இலுப்பை மரத்தின் பொந்தில் புகுந்து கொள்கிறது; அடுத்த க்ஷணம், அந்த மரம் வேரற்று பூமியில் சாய்கிறது; அப்படிசாய்ந்த மரம் அனந்த பத்மநாபனாகக் காட்சி தருகிறது; திருவல்லம் என்ற ஊரில் திருமுடிப்பகுதி; திருவனந்தபுரத்தில் திருமேனிப் பகுதி; திருப்பாதபுரம் என்கிற ஊரில் திருவடிப்பகுதி. மஹரிஷி பிரமித்தார்; பகவானை ஒரு சேரத் தரிசிக்க முடியவில்லை. திருவடிவைச் சுருக்கி சேவை சாதிக்க வேண்டும் என்று வேண்டினார். பகவான் உடனே, ரிஷிகளின் கையில் இருந்து "யோக தண்டமாக"க் காட்சி தந்தார். அதனால் தான் அந்த ரிஷியின் வம்சத்து பிராம்மணர்கள் அனந்த பத்மநாபனை ஆராதிக்கும் உரிமை பெற்றார்களாம்.

**இன்னொரு வரலாறு :**

லீலாசுகர் என்கிற வில்வ மங்கல சுவாமிகள். இவர் கேரள பிராம்மண நம்பூதிரி, தினந்தோறும், இப் பெருமானைத் தரிசிப்பார். நிவேதனம் செய்வார்; ஒருநாள்





நிவேதனத்துக்கு ஒன்றும் இல்லாத சமயம்; கையில் இருந்த மாங்காய்களை, ஒரு கொட்டாங்கச்சியில் வைத்து பெருமானுக்கு நிவேதனம் செய்தார். கொட்டாங்கச்சி... இந்தப் பக்கத் தேசங்களில் “சிரட்டை” என்று சொல்வார்கள். அனந்த பத்மநாபன், மிகவும் ஆனந்தம் அடைந்தாராம். இப்போது கூட, நிவேதனத்தின் போது, பொன்னால் கட்டப்பட்ட “சிரட்டை”யில் மாங்காயை வைத்து நிவேதனம் செய்கிறார்கள்.

ஆதித்யவர்மன் என்கிற சேரநாட்டு அரசனின் ஆட்சியில், இந்த திவ்யதேசத்துக் கோயிலின் கல் மண்டபத்திலிருந்து பால் கசிந்ததாம். மன்னனே பார்த்துப் பக்திப்பரவசம் ஆனான் என்பர்.

ஒரு சமயம், கர்ப்பக்ருகத்தில் நெருப்பு பிடித்தது. ஆனால், பகவானின் சில விரல்களைத் தவிர இலுப்பைமரத் திருமேனி தீயில் பாதிக்கப்பட வில்லை என்பர்.

**சிறப்புகள் :**

ஸ்ரீநம்மாழ்வார் மிகவும் உகந்த திவ்ய தேசம், **“அனந்தபுரம் கடைத்தலைசீய்க்கப் பெற்றால் கருவினைகளையலாமே”** என்று பாசுரம் இட்டுள்ளார். கடைத்தலை சீய்த்தல் என்றால் துடைப்பத்தால், கருவறை முதலிய புனித இடங்களைச் சுத்தப்படுத்துதல். இப்படிச் சுத்தம் செய்வது இன்றளவும் நடந்து வருகிறது.

“அனந்தன்காடு” என்கிற இந்த இடத்தில், சப்தரிஷிகள் தவம் செய்தனர்; பிரம்மா, சிவன், தேவர்கள் – இவர்களுக்கு பகவான் நேரில் தோன்றி அருளி, அவர்களால் வழிபடப்பட்ட அனந்தபத்ம நாபன். இப்போதும், தினமும் மூன்று வேளையும் தேவர்கள் பூஜை செய்கிறார்கள் என்று, நம்பூதிரிகள், கர்பக்ருகத்துக்கு வெளியே நின்று வணங்கி இருப்பர்.

கேரள தேசம் முழுவதும் இந்த எம்பெருமாளின் சொத்து என்று குலசேகர மன்னன் கல்வெட்டு உள்ளது. சேரநாட்டு அரசர்கள், தங்களை “பத்மநாப தாசன்” என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்வார்களாம்.

கிழக்கே பார்த்த திருமுக மண்டலம், கர்பக்ருகத்துக்கு மூன்று வாசல்கள். இடப்பக்கவாசலால் – திருமுடி சேவை. நடுப்பக்க வாசலால் – திருவுந்தித் தாமரை மலர், பிரம்மா, பகவானின் திருமேனி சேவை வலப்பக்க வாசலால் திருவடி சேவை, – இப்படி சேவை சாதிக்கும், அத்புத திவ்ய தேசம்.

**திருவனந்தபுரம் திவ்ய தேச வைபவம் வளரும்...**

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 60க்கான பதில்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ட | மை | | 2 தே | வ | 3 கி | | 4 ம | |
| ர் | | | 5 போ | ர் | | ரு | | து | |
| 6 ம | து | 7 ரா | | | ணு | ஷ் | 8 வி | 9 சூ | து |
| | | தா | | | | ண | | த | |
| | தி | ந் | 10 கு | சே | ல | ர் | | ண | |
| ர் | 11 ய | 12 பி | 13 கோ | வி | ந் | தா | கு | ன் | ன் |
| | சோ | ரு | ல | கை | | | ங் | ண | ம |
| 14 கீ | தை | ந் | ம் | ர | க | க் | 15 ச | ண் | ரா |
| | | தா | | வா | | | | 16 க | ல |
| | ர் | ண | ரோ | 17 து | மா | த் | மா | ர | 18 ப |



# கோமாதா நம் குலமாதா

## பசுவை பேணுவோம் புண்ணியம் பெறுவோம்

திரு. பி. தாமரை சிவராமன்,
திருவள்ளூர்

**காமதேனு - பசு :**

அமிர்தம் பெறுவதற்காக தேவாசுரர்கள் திருப்பாற் கடலை கடைந்த போது அதில் காமதேனுவும் தோன்றியது. அதன் மூலம் மானசீகமாக பட்டி, விமலை, சயனி, நந்தினி, கொண்டி என்று பஞ்ச பசுக்களும் தோன்றின.

**கண்ணன் - கோபாலன் - கோவிந்தன் :**

"கோ" என்றால் பசு. அதை காப்பதால் கண்ணன் கோபாலன், கோவிந்தன் என்றும் போற்றப்படுகிறான். ஆயர்பாடியில் மக்களையும் பசுக்களையும் உயிரினங்களையும் காத்தருள கோவர்த்தன மலையை குடையாகத் தூக்கிப் பிடித்து இந்திரனின் கர்வத்தை அடக்கி அடைக்கலம் அளித்ததால் அதன் நினைவாக தீபாவளியை அடுத்து கோவர்த்தன விரதம் அனுஷ்டிக்கிறோம்.

*"குன்றம் ஏந்தி குளிர் மழை காத்தவன்"*
என்று திவ்விய பிரபந்தமும்,
*"குன்று குனிலாக் கனி உகுத்த மாயவன்*
*இன்று நம்மானுள் வருமேல் அவன்வாயில்*
*கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழி!"*
என்று சிலப்பதிகாரமும்
*"கறவைக் கணங்கள் கன்று மறந்து கால்பரப்பிட்டு*
*செவியாட்ட கில்லாவே"*
என்று ஆழ்வார் வாக்கும் பெருமை கூறுகிறது.

**திருமூலர் திருமந்திரம் :**

திருமூலர் பசுக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்குவதற்காக தன்னுடலை இழந்து யோகம் புரிந்து ஆண்டிற்கொரு பாட்டாக மூவாயிரம் பாடல்களைத் தமிழ் மந்திரமாக திருமந்திரம் அருளி *"யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை"* என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**விசார சர்மனர் என்ற சண்டேசுவரர் :**

பசுவைப் போற்றி திருத்தொண்டாற்றிய விசார சர்மனர் என்ற சண்டேசர் நாயன்மார்களில் சண்டே சானுக்ரக பட்டம் பெற்று இறைவனுடைய தலைமை அடியவர் என்ற சிறப்பினை பெற்றதும் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

**நம்முடன் வாழும் பசுக்கள்**

பாற்கடலிலிருந்து ஐந்து பசுக்கள் தோன்றியதாகவும் அவை கபிலை நீலநிற நந்தாவும், கருமையான பத்திரையும், வெண்மையான சுரபியும் புகை, பொன்னிறம் சுசீலையும், சிவந்த தாமிரநிறம் சுமனையும் ஆகிய இவற்றின் சந்ததிகளே பூலோகத்தில் இன்று வாழும் பசுக்களாகும்.

## நான்கு திசை தெய்வங்களுக்கும் சிவன் அளித்த நான்கு பசுக்கள் :

சிவபெருமான் நான்கு பசுக்களை தோற்றுவித்து அதில் இந்திரனுக்கு சுசிலையும், எமனுக்கு கபிலையும், வருணனுக்கு ரோகிணியும், குபேரனுக்கு காமதேனுவும் அளித்தார் என்று மகாபாரதத்தில் அனுசான பர்வத்தில் கூறப்பட்டுள்ளது.



## பசும்பால் சொரிந்து வெளிப்பட்ட ஆலயம் :

அன்னை பராசக்தி பசுவாகவும், அப்பசுவும் பால் சொரிந்து புற்றிலிருந்து வெளிபடுத்திய சிவலிங்கம், பசுபதீஸ்வரர் என்றும், ஆலயம் பசுபதீஸ்வரம் என்றும் போற்றப்படுகிறது.

## பஞ்ச கவ்யமும் மருத்துவமும் :

ஆயுர்வேத சாஸ்திரங்கள் சரக்சம்ஹிதை, சுஷ்ருத், கட்நிக்ரஹ் முதலிய நூல்கள் பஞ்ச கவ்யத்தின் பெருமை களை கூறுகிறது. வெண்மேக நோய் (லூகோடோமா), அஜீரணக் கோளாறு, வாயுத்தொல்லை, வயிற்றுப்புண் களும் குணமாகி பலனளிக்கிறது.

## கோ ஸ்துதி

*''காம் சத்ருஷ்ட்வா நமஸ்க்ருத்ய க்ருத்வா சைவ பிரதக்ஷிணம்*
*ப்ரத க்ஷிணீக்ருதா தேன ஸப்தத்வீபா வஸுந்தரா*
*ஸர்வ காமதுகே தேவி ஸர்வ தீர்த்தா பிஷேசினீ*
*பாவனே ஸீரபிஸ் ரேஷ்டே தேவிதுப்யம் நமோஸ்துதே''*

## பொருள் :

தெய்வப் பிறவியான பசுவை வணங்கி அதனை வலம் வந்து துதித்தால் ஏழுதீவுகளுடன் கூடிய பூமியை வலம் வந்த புண்ணியம் கிட்டுகிறது. நற்குணங் கள் நிரம்பிய அமுதம் போன்ற பாலை நல்கும் பசுவை வழிபட்டால் நம் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும். இந்த வழிபாடு அனைத்து புண்ணிய நதிகளில் நீராடிய பலனைத் தர வல்லது, நம்மை பரிசுத்தம் செய்யக்கூடியவள் இந்தப் பசு. கேட்டதையெல்லாம் அருளும் காமதேனுவாகத் துலங்கும் கோமாதாவே, உன்னை வணங்குகிறேன்.



## நாட்டிற்கும், வீட்டிற்கும், யாவருக்கும் :

நாடு வளம் பெற, சுற்று சூழல் சிறக்க, பால்வளம் பெருக மழை நீர் சேகரித்து வீட்டிற்கொரு மரம் வளர்த்து இல்லத்திற்கு பசுவளர்த்து இன்புற்று வாழ்வோமாக.

## அறச் செயல் வேறினும் அறப்பயன் ஒன்றே :

பசுக்கள் பலதரப்பட்ட வடிவும் வண்ணங்களும் கொண்டவையாக இருந்தாலும், அவைதரும்பால் வெவ்வேறு நிறங்களின்றி ஒரே வெள்ளை நிறமுடையது தான். அதைப் போல அறங்களைச் செய்கின்ற வழிகள் பல் வேறு வகைப்பட்டாலும் அறத்தால் கிடைக்கின்ற அறப் பயன் ஒன்றேயாகும்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

## 12. வஜ்ராசனம் :

வஜ்ராசனம் ஒரு மண்டியிடும் நிலை. இது அதன் பெயரை சமஸ்கிருத வார்த்தையான வஜ்ரா என்பதிலிருந்து பெறுகிறது. அதாவது வஜ்ர என்றால் வைரம் அல்லது இடி ஆசனா என்று பொருள். வைரம் பாய்ந்த தேகம் ஏற்படுவதற்கு வஜ்ராசனம் உதவுகிறது. இரத்த ஓட்டத்தை சீர் அடையச் செய்வதற்கு பெரிதும் உதவுகிறது. இடுப்பு, வயிறு, தொடை, கால்களில் தசைகளை வலுவடையதாக்குகிறது. உணவருந்திய பின்பும் செய்யக்கூடிய ஒரே ஆசனம் வஜ்ராசனம் மட்டுமே ஆகும்.

## 13. பக்ஷிமோத்தாசனம் :

இவ்வாசனத்தின் இறுதி நிலை பறவையின் முகம் போல அமைந்திருப்பதால் பக்ஷிமோத்தா சனம் என வழங்கலாயிற்று.

இரத்த ஓட்டத்தை சீர் செய்யும் ஆசனங்களில் இதுவும் ஒன்று. வயிறு, இதயம், மூளை போன்ற உறுப்புகளுக்கு இரத்தம் முழுமையாகக் கிடைக்க உதவுகிறது. ஜீரண சக்திக்கு உதவுகிறது. தொந் தியைக் குறைக்க சிறந்த ஆசனம் இது. எளிதாக நெகிழுந் தன்மையில் முதுகெலும்பினை உருவாக்கி ஆமையாய் வாழும் வாய்ப்பினை அளிக்கிறது.

## 14. வீரபத்ராசனம் :

வீரபத்ராசனம் என்பது போர் வீரனுக்கு உரிய ஆசனம் என்று பொருள். சிவபெருமானின் அவதாரங்களில் வீரபத்ரன் என்பவர் மிகவும் வீரத்திற்கு சிறந்து விளங்குவதாக உபநிடதங்கள் கூறுகின்றன.

வீரபத்ராசனம் தசை மண்டலத்தை ஊக்குவிக் கிறது. கவனம், சமநிலை போன்றவற்றை மேம் படுத்தக் கூடியது. இந்த யோகாசனம் செய்வதால் உடலில் நல்ல சுவாசத்தை ஊக்குவிக்கிறது. உடல் முழுவதும் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது.

பக்ஷிமோத்தாசனத்திற்கு மாற்று யோகாசனம் இது. ஒரு வில் போன்ற அமைப்பை உடைய ஆசனமாகும். இந்த ஆசனம் செய்வதால் சுவாச உறுப்புகளுக்கு பலன் உள்ளடக்கியது. முது கெலும்பைச் சார்ந்த பகுதிகளுக்கு இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இந்த ஆசனத்தை செய்து வந்தால் எந்த வயதிலும் இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க முடியும்.

## 15. பகாசனம் :

காகத்தின் அமைப்பை பெறுவதால் இப் பெயர் வந்தது. கைகளையும் தோள்களையும் பலப் படுத்துகிறது. முட்டி முழங்கால் ஆகிய அனைத்திற் கும் சக்தியூட்டுகிறது. தசை மண்டலத்திற்கு மிகுந்த உறுதியைக் கொடுக்கிறது.

# பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள்

டாக்டர் கி.ஐ. நிகிலா வெங்கட்
கோயம்பத்தூர், 8940991234



# கண்ணன் கருத்துரை



*ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் ।*
*கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை: ॥* (3-5)

**ஒவ்வொருவரும் உடலால், வாக்கால், உள்ளத்தால் செயல்புரிகின்றனர். எப்பொழுதாயினும் சரி இந்த மூன்றில் ஏதேனும் ஒரு செயல் செய்யாமல் எவரும் இருப்பதில்லை. பிரகிருதியிலிருந்து தோன்றிய குணங்கள் எப்பொழுதும் ஏதோ ஒரு செயலைச் செய்து கொண்டே இருக்கிறது.**



**தொகுப்பு :**
**பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.**

**16. சுகாசனம் :**

சுகமாகவே அமர்ந்து இருப்பதே சுகாசனம் ஆகும். இடுப்பு, முதுகுத் தண்டை வலிமையாக்கும். உட்கார்ந்து செய்யும் ஆசனங்களில் சுகாசனம் சுலபமானது எளிமையானது. இந்த ஆசனம் மார்பு பகுதியை பல படுத்தக் கூடியது. சுவாசத்தை சீர்படுத்த பெரிதும் உதவக் கூடிய ஆசனம் சுகாசனம். மனதை அமைதியில் நிலைப்படுத்தவும், மனதை மேம் படுத்தவும் உதவுகிறது.

தொடரும்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ததஸ்ஸப$_4$ார்யௌ தத$_3$நுஜ்ஞயா தௌ ஸ்வம்*
*வாஸமாக$_3$ம்ய சிரம் ஸுசீலௌ।*
*ஸ்ரீசம் ஸமாராத்$_4$ய ததீ$_3$யப$_4$க்தௌ ஸஹ ப்ரியாப்$_4$யாம்*
*முதி$_3$தாவபூ$_4$தாம் ॥*
(5)

**அதன் பிறகு, திருமலை நம்பியின் அனுமதி பெற்று, மனைவியரோடு கூடிய அவ்விருவரும் தத்தம் ஊருக்குச் சென்று, நல்லொழுக்கம் உடையவர்களாய், ச்ரிய:பதியை ஆராதிப்பவர்களாய், அவனடியார்களிடம் அன்பு பூண்டவர்களாய், மனைவியரோடு நெடுங்காலம் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.**



**–"ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது**

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

## ஸ்ரீமந்நாதமுனிகள் வாழித்திருநாமம் தொடர்ச்சி...

மன்னனார் கோயிலிலே பெருமாள் முன் தேவகானம் பாடுவதைக் கேட்ட ஸ்ரீமந்நாதமுனிகள் அவளுக்கு மன்னனார் தீர்த்த பிரசாதம் முதலான வற்றைக் கொடுத்து கௌரவித்தார். அவளும் இவரை வணங்கி அரசனிடம் சென்று தாம் பாடுகிற தேவகானத்தை அறிந்த ஒருவர் வீரநாராயணபுர மன்னனார் கோயிலில் இருக்கும் ஸ்ரீமந்நாதமுனிகள் என்கிற பெரியவர்தான். அவரைத் தவிர உலகில் வேறு யாரும் இல்லை என்று சொன்னாள். உடனே அரசனும் ஸ்ரீமந்நாதமுனிகளை வரவழைத்து, அவரை உபசரித்து தேவகானத்தை அறிந்தபடியை விளக்கிச் சொல்லச் சொன்னார். ஸ்ரீமந்நாதமுனிகள் நாற்பது நூறு தாளத்தைக் கொண்டு வரச் சொன்னார்.

அவற்றைச் சேர ஒத்தச் சொன்னார். அந்த ஓசையைக் கேட்டு இது இவ்வளவு எடை, இது இவ் வளவு எடை உள்ளது என்று ஒவ்வொன்றினுடைய அளவையும் சொன்னார். அரசனும் தனித்தனியே அவற்றை சோதித்து நிறுத்து, அவற்றில் முந்திரி அளவாவது ஏற்றம் குறைவில்லாமல் இருப்பதைக் கண்டு வியப்படைந்தான். அரசனை ஆசிர்வதித்து மன்னனார் கோயில் வந்தார். பின்னர், ஸ்ரீமந்நாத முனிகள் நியமனத்தாலே ஸ்ரீரங்கத்தில் மிகச் சிறந்ததான அரையர் சேவை என்ற பெயரில் இந்த திவ்ய கானம் தடையின்றி அரையர்களால் அபிநய னத்துடன் அத்யயன உற்சவங்களில் இன்றளவும் பாடப்படுகிறது.

திருப்பல்லாண்டு தொடக்கமாக திருநெடுந் தாண்டகம் வரை பகல் பத்து நாட்களிலும், திருவாய் மொழியை இராப்பத்து நாட்களிலும் சேவிப்பர். இயற்பாவை இயலாக சேவிப்பது ஸ்ரீமந்நாதமுனிகள் ஏற்படுத்திய முறையாகும். இந்த அரையர் சேவை ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் மேலுக் கோட்டை ஆகிய திவ்ய தேசங்களில் இன்றும் பிரசித் தமாக நடந்து வருகிறது. இது பற்றியே தாளமுடன் இசைத்தவர் ஸ்ரீமந்நாதமுனிகள் என்றபடி.

(கருணையினால் உபதேசக் கதி அளித்தான்) கதி – வழி, புகலிடம். உபதேசமாவது தாம் நம்மாழ்வா ரிடம் இருந்து பெற்ற ரகஸ்ய தாத்பர்யங்களும் திவ்வியப் பிரபந்தங்களும் மற்றும் அஷ்டாங்க யோக ரகஸ்யமுமாகும். இவற்றை தம் கருணையினால் உய்யக் கொண்டார், குருகைகாவலப்பன், நம்பி கருணாகர தாஸர், ஏறு திருவுடையார், திருக்கண்ண மங்கை ஆண்டான், வானமாமலை தேவி யாண்டான், உருப்பட்டூர் ஆச்சான் பிள்ளை மற்றும் சோகத் தூராழ்வான் ஆகிய எண்மருக்கு உபதேசித்த தாகக் குருபரம்பரா ப்ரபாவம் கூறும்.

மேலும் கருணைக்கு எடுத்துக்காட்டாக குருகை காவலப்பனுக்கு அஷ்டாங்க யோக க்ர மத்தை உபதேசித்தார். உய்யக்கொண்டாருக்கு சாஸ்த்ரங் களையும் திருவாய்மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்களையும் உபதேசித்து அவற்றை வளர்க்கச் சொன்னார். தம் குமாரரான ஈச்வர முனிக்குப் பிறக்கும் குமாரருக்கு யமுனைத்துறைவர் என்று பெயரிடச் சொன்னார். உய்யக்கொண்டா ரையும் குருகைகாவலப்பனையும் பார்த்து அவர்க ளுக்கு உபதேசித்தவற்றை யமுனைத் துறைவருக்கு உபதேசிக்கச் சொல்லி வழி காட்டினார் ஸ்ரீமந் நாதமுனிகள். இது பற்றியே உபதேச கதி அளித்தவன் என்றபடி.

(நானிலத்தில் குருவரையை நாட்டினான்) நானிலமாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகைப்பட்ட இந்த பூமி. குருவரையை நாட்டுதலாவது – நானிலமாகிய இந்த உலகில் குருபரம்பரையை நிர்ணயித்தல், முதன்முதலாக கூரத்தாழ்வான் அனைவருக்கும் குருபரம்பரை அநுஸந்தாநத்தின் மூலம் உய்வு பெற அருளிய தனியன் *''லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுநமத் யமாம்''* என்பதாகும். இந்தத் தனியனில் திருமகள் கேள்வனான எம்பெருமானுக்கு அடுத்ததாக நாதமுனிகளை அருளியுள்ளார்.

மதுரகவிகளினுடைய திவ்ய ப்ரபந்தத்தை நாத முனிகள் தான் அநுஸந்தித்து நம்மாழ்வாருடைய அருள் பெற்ற நாதமுனியானார். அந்த ஸ்ரீமந் நாதமுனிகள் அருளாலே அவர் திருப்பேரனான யமுனைத் துறைவர் நம் தர்சனத்தை ஆள வந்தது. இந்த தனியனில் நாதமுனிகளை நடுவில் சொன்னது. இராமாநுசருக்கும் உபலக்ஷணமாகும் என்பர். ஏனெனில் உடையவர் தாம் குருபரம்பரைக்கு நடுநாயகமாகத் திகழ்பவர். வியாசர் முதலானவர்கள் மூலமாக பகவத் ப்ரஸாதம் காரணமாக வளர்ந்து வந்த சாஸ்த்ரங்களைக் காட்டில், நேராக பகவத் ப்ரஸாதம் காரணமாக ஆழ்வாராலே அவதரிக்க ஏற்றத்தை உடைய திருவாய்மொழியை அவர் க்ருபையாலே பெற்ற ஏற்றத்தைச் சொல்லுகிறது.

சாஸ்த்ரம் பரப்புவதற்கு காரணம் வியாஸர் கருணையாகையாலே வேதம் மூலமிருக்கும் அது. அதன் கருத்தான இதுக்கு *"நாதம் பங்கஜ நேத்ர..."* என்று மாமுனிகள் அருளியபடி ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமாக நடந்து செல்லுகிற ஆசார்ய பதத்தில் இருப்பவராய், அருளிச் செயலை விரும்பி வளர்த்துக் கொண்டு வருமவர்கள்தான். மேலும் ஸ்ரீமந் நாத முனிகள், உய்யக்கொண்டார் என்று தொடங்கி தேவராஜர் என்னுமளவிலும் காட்டப்பட்ட ஆசார்யர்கள் என்றும் *"திருவருள்மால்... அருள் பெற்ற நாதமுனி முதலாம் நம் தேசிகர்"* என்று ஆசார்யர்கள் பரம்பரையை அருளியது காணலாம். மேலும் *"சேனைநாதன் அருள் மாறன் நாதமுனி தாமரைக் கண்ணி ராமர் வா..."* என்ற தனியன் மூலமாகவும் அறியலாகும்.

(நலந்திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே) – நலமாவது நன்மை. திகழ்வதாவது – விளங்குவது. நாதமுனிகளுக்கு நன்மையாவது ஆளவந்தார் தாம் அருளிய ஸ்தோத்ர ரத்னத்தில் *''நமோ... ஸிந்தவே''* என்கிறபடியே நாதமுனிகளுடைய ஞான, வைராக்ய பக்திகளினுடைய உயர்வைச் சொல்லுகிறார்.

இவருடைய ஞானம் முதலானவை இன்னாருடையது என்று நினைக்க முடியாது. இவ்வளவு என்று அறிவிற்சிறந்தவராலும் அளவிட முடியாது என்கிறார். மேலும் உண்மை அறிவினுடையவும் அன்பினுடையவும் பெரு மேன்மையின் முடிவே எல்லையாயிருப்பவருமானவர் என்பர். அளவற்ற பகவத் பக்தி என்ன, உண்மை அறிவு என்ன, பக்தியின் பரம பர்யோஜனமாயும் இருப்பவர் என்கிறார்.

முநி: – பகவானை நினைக்கிலுண்டான ஆனந்தத்தினால் நிலை நின்றவர். அதாவது தியானிக்கத் தக்க வஸ்துவான எம்பெருமானை எப்போதும் மனக்கண்ணாலே காண்கை. சீலங்கொள் நாதமுனி. நாதன் அருளுருவானவராகையாலே இவருக்கு நாதமுனிகள் என்று பெயர். ஸ்ரீரங்கநாதர் என்னும் திருநாமத்தை உடையவர். நம்மாழ்வாரை நாதராக உடையவராய், அந்த ஆழ்வாருடைய அருள் பெற்ற நாதமுனி என்பர். அருள் பெற்ற நாதமுனி – அருள் மாறன் அருளைப் பெற்றவர். அல்லது ஆழ்வார் அருளையாவது அதற்குக் காரணமான மன்னனாருடைய அருளையாவது பெற்றவர் என்பர் பிள்ளை லோகம் சீயர்.

வேதாந்த தேசிகர் அருளிய ஸம்ப்ரதாய பரிஶுத்தி என்னும் ரஹஸ்யத்திலே வேதாந்த ஸம்ப்ரதாயத்துக்கு இந்த யுக ஆரம்பத்திலே பிரம்மநந்தி முதலானோர்க்குப் பிறகு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார் என்றும் குருபரம்பராஸாரத்திலும் இவ்வாசார்யர்களில் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு மதுரகவிகள் முதலாக உண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் திருவாய்மொழி முகத்தாலும் யோக தசையிலே ஸாக்ஷாத் க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார் என்றும் உள்ளமை காண்க.

ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடியானது *''நாதஸ்ரீபாத பங்கஜே''* என்கிறபடியே தம் ஸர்வ பாரங்களையும் வைத்து அவர்தம் சீடரான உய்யக்கொண்டார் வணங்குவதாகக் கூறுவர். அவ்வாறே நாமும் அவர்தம் திருவடிகளை வணங்குவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

# தசரதன்



*விந்தையான வீரம் கொண்ட அசகாய சூரன். பத்து திக்குகளிலும் (8 திசைகள்+ ஆகாயம்+பாதாளம்) இரதத்தினை செலுத்தி போர் புரியும் ஆற்றல் பெற்றதால் "தசரதன்" என்று சிறப்பு பெற்றார்.*

**திரு. சத்யதாரா, சென்னை,**
**99445 61775.**

யார் இந்த தசரதன்? எங்கிருந்து வந்தான்?... இவன் பூர்வீகம் என்ன? இன்று நாம் வாழும் காலத்துக்கு முன்பான பகுதியை நொடிக்கு ஆயிரம் ஆண்டுகள் கணக்கிட்டு ஒரு சில நிமிஷங்கள் கற்பனை செய்து கொள்வோம். பல பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ...பூமி எனப்படும் நமது கிரகத்தில் உள்ள நிலப்பகுதிகளை இரண்டே இரண்டு வம்சங்களை சேர்ந்த மன்னர்கள்தான் ஆண்டு வந்தனர்.

ஒன்று சூரிய வம்சம்... மற்றொன்று சந்திர வம்சம். சூரிய வம்சத்தில் உதித்தவர்களே ஸ்ரீராமனின் முன்னோடி பரம்பரை (சந்திர வம்சத்தில் வந்தவர்கள் தான் மஹாபாரத நாயகர்களான கௌரவர்களும் பாண்டவர்களும்).

நாம் அறிந்த புராணங்களின் வாயிலாக கிடைக்கும் சான்றுகளில், சூரிய வம்சத்தில் மாமன்னன் இக்ஷ்வாகு தொடங்கி, திரிசங்கு, நாபாகன், திலீபன், ரகு போன்ற புகழ் பெற்ற மன்னர்களின் பரம்பரையில் தோன்றிய அஜன் என்று அறியப்பட்ட மன்னனின் புத்திரனே தசரதன். தசரதனைப் பெற்ற தாய் இந்துமதி. அயோத்தியை தலை நகரமாகக் கொண்டு கோசல தேசத்தினை ஆண்டு வந்தான். விந்தையான வீரம் கொண்ட தசரதன் அசகாய சூரன். பத்து திக்குகளில் (8 திசைகள்+ ஆகாயம்+பாதாளம்) இரதத்தினை செலுத்தி போர் புரியும் ஆற்றல் பெற்றதால் "தசரதன்" என்று சிறப்பு பெற்றார் என்றும் ஒரு செவி வழி செய்தி உண்டு.

### தசரதனின் வீரத்திற்கு ஒரு சான்று:

ஒருமுறை தசரதனின் அரசவை ஜோதிடர்கள் சனி பகவான் கார்த்திகை நட்சத்திரத்தில் இருந்து ரோஹிணி நட்சத்திரத்தில், சகடத்தை உடைத்து சஞ்சாரம் செய்யப் போகிறார். இதனால் 12 வருட காலம் கடும் பஞ்சம் உண்டாகும். சகல லோகங்களும் அழியும் நிலை ஏற்படும் என்றனர். இதற்கு பரிகாரம் தேடினார் தசரதன். அவரது அவையினில் இருந்த பிரம்ம ரிஷி வசிஷ்டர் உள்பட பலரும் இதற்கு வழியே இல்லை. கிரகங்களின் சஞ்சாரத்தினையும், அவற்றினால் உண்டாகும் பாதிப்பினையும் கட்டுப்படுத்துவது, மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்று என்றும், பஞ்சத்தினை எதிர் கொள்ளவும் வழி தேடும்படி கூறினர்.

எந்த வழியிலாவது மக்களை இந்த ஆபத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று தீவிரமாக சிந்தனை செய்தார் தசரதன். சனி பகவான், கார்த்திகையில் இருந்து ரோஹிணி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் தருணம் நெருங்கியது. தன்னால் இயன்ற வரை விண்ணில் பல காத தூரம் பயணித்து, சனி என்னும் கிரக மண்டலத்தை நோக்கி வலிமை வாய்ந்த ஒரு "சம்ஹார அஸ்திரத்தை" பிரயோகம் செய்ய முயன்றார். அப்போது அஸ்திரத்துடன் தசரதர் நிற்பதைப் பார்த்த சனி பகவான் "தசரதரே! தேவர்களையும் நடுங்கச் செய்யும் உனது பராக்கிரமம் வியக்க வைக்கிறது. அஸ்தி



ரத்தைப் பிரயோகிக்க வேண்டாம். வேண்டும் வரம் அளிக்க சித்தமாக உள்ளேன் என்ன வேண்டும் கேள்" என்றார்.

உடனே, பெரு மகிழ்ச்சி கொண்ட தசரதன் சூரிய சந்திரர்கள் இருக்கும் வரை, பூமியில் நதி உள்ளிட்ட நீர் நிலைகளில் "சனீஸ்வரன் ரோஹிணி நட்சத்திரத்தினை கடக்கும் பன்னிரண்டு ஆண்டும், வறட்சியும், பஞ்சமும் தோன்றிடாமல் எனது நாட்டு மக்களை காக்க வேண்டும் என்று ஒரு வரம் கோரினார். அவ்வாறே அருளிய சனீஸ்வரனை நோக்கி, தசரதன் ஸ்ரீவிநாயகர் மற்றும் சரஸ்வதி தேவியின் அருளோடு, ஒரு ஸ்துதி செய்தார்.

அதுவே...

*"கோனோந்தகோ ரௌவத்ர ய்யாமோ அத பப்ரு:க்ருஷ்ண: சனி:பிங்கள மந்த சௌரி:*

*நித்யம் ஸ்ம்ருதோ யோ ஹரதே ச பீடாம் தஸ்மை நம: ஸ்ரீரவி நந்தனாய...*

எனத் துவங்கும் சனீஸ்வர ஸ்தோத்ரமாகும்.

இந்த ஸ்துதியை தொடர்ந்து சிரத்தையுடன் பாராயணம் செய்யும் பக்தர்களுக்கு, சகல விதமான கஷ்டங்களையும் விலக்கி, அனுக்கிரஹம் செய்வேன் என்றும் சனீஸ்வர பகவான் அருளினார்.

இத்துணை பெருமை வாய்ந்த தசரதனுக்கு, கௌசல்யா, கைகேயீ, சுமித்ரா என்ற மூவர் மனைவியாக, மகாராணிகளாகத் திகழ்ந்தனர். முதன்முதலில், தசரதனுக்கு "சாந்தை" என்ற ஒரு பெண் மகவு இருந்ததாகவும், பிறந்த உடன் தனது நெருங்கிய நண்பனான அங்க நாட்டு மன்னனுக்கு அந்த குழந்தையை தத்து கொடுத்து விட்டதாகவும் சில கிரந்தங்கள் மூலம் அறியப்படுகின்றன. அந்த பெண் மகவையே, ரிஷ்ய ஸ்ருங்கர் என்ற மகரிஷி (தசரதனுக்கு புத்ர காமேஷ்டி நடத்தி வைக்கும் மஹான்) மணக்கிறார்.

## அயோத்தியின் வாரிசுகள் உருவாகுதல் :

அடுத்ததாக, சூரிய வம்சத்தின் பரம்பரை வளர, ஆண் வாரிசு வேண்டும் என்று, குருவான வசிஷ்ட மகரிஷியின் ஆசியுடன் தசரதன் ஒரு பெரும் யாகம் செய்தார். அதுவே, ரிஷ்ய ஸ்ருங்கர் என்ற மகரிஷி நடத்தி வைக்கும் புத்ர காமேஷ்டி யாகம். வேள்வித் தீயில் தோன்றிய தேவ புருஷன் மூலம் ஒரு பாத்திரம் நிறைய பாயசம் பிரசாதமாக அருளப்பட்டது. அதனை தனது பட்டத்து ராணிகள் மூவருக்கும் பிரித்து வழங்க, கௌசல்யாவுக்கு, ஸ்ரீராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்ராவுக்கு லக்ஷ்மணன் – சத்ருக்னன் ஆகிய இரட்டையருமாக நான்கு புத்திரர்களை பெற்றார்.

## தசரதன் பெற்றிருந்த சாபமும் முடிவும் :

அயோத்தியின் அரியணையில், குருமார்களின் ஆசியுடன் ஸ்ரீராமனை ஏற்றி வைத்து, பட்டாபிஷேகம் நடத்த ஏற்பாடுகள் செய்கிறார். இவ்வயம் மஹாராணி கைகேயி கேட்ட வரத்



தினால் எதிர்பாராத திருப்பங்கள் தோன்றின. ஸ்ரீராமனை 14 ஆண்டுகள் வனவாசம் அனுப்பவும், பரதனுக்கு பட்டாபிஷேகம் செய்யவும் வாக்கு அளிக்கும் நிலை ஏற்பட்டது.

ஸ்ரீராமன் வனவாசம் புறப்பட்டு விட, மனம் துடித்து கதறிய வண்ணம் தரையில் சாய்ந்த மன்னனை, தனது மடி மீது இருத்திய கௌசல்யா விடம், "உனக்கு இதுவரை தெரியாத ஒரு உண்மையை சொல்கிறேன்" என்று ஒரு பழைய நிகழ்ச்சியினை நினைவு கூர்ந்து விவரித்தார்.



செவியினால் கேட்ட வண்ணமே, ஓசை வரும் திசையை நோக்கி குறியை அனுபவித்து வெற்றிகரமாக அம்பெய்து வீழ்த்தும் "ஸப்த வேதனம்" கலையில் எனக்கு முழுமையான திறமை இருந்தது. திடீரென்று யானை ஒன்று ஓடையில் நீர் அருந்தும் சலசலப்பான ஒலி. லட்சியத்தை கூர்ந்து அம்பு எய்தேன். அந்தோ பரிதாபம். கண் பார்வையற்ற தனது தாய் தந்தையரை ஒரு பெரிய தராசில் சுமந்து வந்த ஒரு இளைஞன், பெற்றோரின் தாகம் தீர்க்க, சுரைக்குடுக்கை ஒன்றினை நீரோடையில் முக்கி, நீர் நிரப்பிக் கொண்டு இருந்த நிலையில், எனது அம்புக்கு பலியானான். வேகமாக நெருங்கிய நிலையில் தண்ணீரை தங்களது பெற்றோருக்கு அளிக்கச் சொல்லி, உயிர் இழந்தான்.

அவனது பெற்றோருக்கு நீர் எடுத்து சென்ற என்னை, எனது பேச்சால் அடையாளம் கண்டு கொண்டனர். "ஓ" வென்று அலறினர். "எங்களைப் போலவே நீயும் புத்ர சோகத்தால் மாண்டு போவாய் என்று சாபம் இட்டு அடுத்த நொடியே மரணம் அடைந்தனர். அரண்மனை திரும்பிய எனக்கு துயரம் ஒரு பக்கம், துள்ளிய மகிழ்ச்சி ஒரு பக்கம். புத்ர சோகத்தால் மரணம் என்றால் எனக்கு புத்ர பாக்கியம் உண்டல்லவா?" அவர்களின் சாபம் பலிக்கும் தருணம் வந்து விட்டது. என் கண்மணி இராமன் என்னை விட்டு நீங்கினால் நான் மரணித்து விடுவேன்" என்று கௌசல்யாவின் மடியின் மீது இருந்தவாறே புலம்பினார்.

மந்திரி சுமந்திரன், இரதத்தில் ஸ்ரீராம, சீதா, லக்ஷ்மணர் மூவரையும் அயோத்தியின் எல்லை தாண்டி கானகத்தில் விட்டு விட்டு திரும்புகிறார். அவரிடம்,எனது இராமன் எங்கே? என்று ஓலமிடுகிறார் மன்னன் தசரதன். "யார் தடுத்தும் கேளாமல், தந்தையின் வாக்கினை மெய்ப்பிப்பேன் என்ற சத்யம் தவறா நிலையில், ஸ்ரீராமன் கானகம் சென்று விட்டான் என்று சுமந்திரர் பதில் கூற, அந்த க்ஷணமே ஆஹா என் இராமா என்று அலறியவாறு அதிர்ச்சியிலேயே சுவாசம் நின்று விட மாமன்னனின் உயிர் பிரிந்தது.

**பல ஆண்டுகளுக்குப்பின் தசரதன் விண்ணில் தோன்றும் காட்சி:**

மீண்டும் ஓர் முறை ஸ்ரீமத் இராமாயண காவியத்தில் தசரதன், தெய்வீக திவ்ய ஸ்வரூபத்துடன் தோன்றும் காட்சி ஒன்றினை மகரிஷி வால்மீகி விளக்கி இருக்கிறார். அதாவது இராவணேஸ்வரனை சம்ஹாரம் செய்து சீதா தேவியை அசோக வனத்தில் இருந்து அழைத்து வந்தபின், தேவியின் பரிசுத்தமான பதிவிரதா மகிமையை உலகோருக்கு உணர்விப்பதற்காக, ஸ்ரீராமன் சீதா தேவியை அக்னி பிரவேசம் செய்யும்படி ஆணையிட அவ்வாறே சீதா தேவி அக்னி பிரவேசம் செய்கிறாள். அந்த க்ஷணத்தில் விண்ணில் தசரதன் தெய்வீக திவ்ய ஸ்வரூபத்துடன் தோன்றி, சீதா தேவி மிகவும் பரிசுத்தமானவள். அவளை அன்புடன் ஏற்றுக்கொள் என்று ஆணையிடுகிறார்.





# கர்ணன் செய்யாத தானம்

குருக்ஷேத்திர போர் முடிந்து கர்ணன் போரில் வீர மரணம் அடைந்து சொர்க்கம் ஏகினான். சொர்க்க லோகம் கனவுலோகம் போல சகலவித சம்பத்தும் சௌகரியமும் நிரம்பி இருந்தது.

அனைவரும் திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் உலா வந்து கொண்டிருந்தார்கள். ஆனால், கர்ணனுக்கோ கடுமையான பசி ஏற்பட்டது. சொர்க்கத்தில் பசி என்பதே ஏற்படாதே தனக்கு மட்டும் பசி எடுப்பதன் காரணம் என்ன என்று குழம்பினான். அப்போது அங்கு நாரதர் வந்தார்.

மனதில் எண்ணியதைப் படிக்கும் சக்தி படைத்தவர் அவர். கர்ணன் கடுமையான பசியால் வாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். கர்ணா உன் ஆள் காட்டி விரலை வாயில் வைத்துக்கொள் என்றார். கர்ணன் தன் ஆட்காட்டி விரலை வாயில் வைத்துக்கொண்ட உடனே பசி அடங்கி விட்டது. விரலை எடுத்தால் மறுபடியும் பசித்தது.

நாரதரே, நீங்கள் கூறியபடி ஆட்காட்டி விரலை வாயில் வைத்தால் பசி தீர்கிறது, எடுத்தவுடன் பசிக்கிறதே என்ன காரணம். இதிலிருந்து எப்படி மீள்வது என்று கேட்டான்.

கர்ணா நீ உன் வாழ்நாளில் ஆயிரக்கணக்கான தானங்கள் செய்திருக்கின்றாய், தங்கம், வெள்ளி, பொன், பொருள் என நவநிதியும் கொட்டிக் கொடுத்திருக்கின்றாய். ஒரு முறை கூட அன்னதானம் செய்ததில்லை. அதனால் தான் உனக்கு கொள்ளைப் பசி எடுக்கிறது என்றார். அப்படியானால் என் ஆட் காட்டி விரலை வாயில் வைத்ததும் பசி அடங்கியது எப்படி நாரதரே ! என ஆச்சரியத்தோடு கேட்டார். நாரத மகரிஷி சொன்னார். நீ நேரடியாக தானம் செய்யா விட்டாலும் ஒருமுறை அன்ன தானம் நடக்கும் இடத்தைப் பற்றி ஒருவர் உன்னிடம் கேட்டார். அப்போது நீ உன் ஆட்காட்டி விரலை நீட்டி அதோ அங்கே அன்ன தானம் நடக்கிறது என்று காட்டினாய், அதனால் உனது ஆட்காட்டி விரல் மட்டும் அன்னதானம் செய்த பலன் பெற்றது.

அன்னதானம் செய்த இடத்தைக் காட்டியதற்கே இவ்வளவு பலன் என்றால் அன்னதானம் செய்தால் இன்னும் எவ்வளவு புண்ணியம் கிட்டும் என நினைத்தான் கர்ணன் என்று செவிவழிக் கதைகள் கூறுகின்றன. எனவே, எத்தனை தான் தான, தருமங்கள் செய்தாலும் பிறர்க்கு அன்னதானம் செய்ய வேண்டியதும் ஒன்று என்பதை இக்கதை மூலமாக நாம் தெளிவாக அறிந்து கொண்டோம்.

**திருமதி டி.ஆர். சோலையர்க்கரசி,**
**கும்பகோணம்.**
**9488943969**

# வெங்கமாம்பாவின் பக்தி

சித்திரக் கதை

கதை மூலம்: டாக்டர் கே. ரவிச்சந்திரன்.
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்

ராஜ வீதியில் பக்தர்கள் கோவிந்தா! கோவிந்தா! என்று முழங்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது மஹந்த் அவர்கள்...




தீக்ஷிதரே! அவ்வாறு கூறாதீர்கள். ஒருமுறை சென்று அவர்களை கேளுங்கள்.
அம்மா தாயே! வெங்கமாம்பா!
அம்மா! தேர் நின்று விட்டது. தாங்கள் முத்யால ஆரத்தியை கொண்டு வாருங்கள் . ஸ்வாமியை புறப்பட செய்யுங்கள் அம்மா.
நான் பெண். மேலும் விதவை அல்லவா!
என் ஆரத்தி சிலருக்கு பிடிக்காது அல்லவா? சரி. இருங்கள். நான் ஆரத்தி கொண்டு வருகிறேன்.
வேங்கடரமணா! சங்கட ஹரணா
இனி இழுங்கள்.
இனி இழுக்கலாமே.
கோவிந்தா கோவிந்தா
அம்மா! உனக்கு நிகரான பக்தர்களே இல்லை. நீ அளிக்கும் முத்யால ஆரத்தி எவ்வளவு சிறப்பானது என்று உலகத்திற்கு தெரிந்தது. இனி வரும் நாட்களில் ஏகாந்த சேவையில் தாங்கள் ஸ்வாமிக்கு முத்யால ஆரத்தியை அளியுங்கள். இன்று முதல் நான் இதனை அமுல்படுத்துகிறேன்.
அடுத்த இதழில் இன்னொரு கதையை கண்டு மகிழலாம்.
முற்றும்.

**பல்சுவைப் பகுதி**

1. கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படும் மாதம் எது?
   அ) ஆடி ஆ) ஆவணி இ) புரட்டாசி
2. கல்விக்கடவுளாக போற்றப்படும் பெருமாள்?
   அ) ஸ்ரீவராஹர் ஆ) ஸ்ரீகிருஷ்ணர் இ) ஸ்ரீஹயக்ரீவர்
3. பெரிய திருவடி என்பவர் யார்?
   அ) கருடன் ஆ) ஆதிசேஷன் இ) அனுமன்
4. ஆவணியில் சூரியன் சஞ்சரிக்கும் ராசி?
   அ) மகரம் ஆ) சிம்மம் இ) கும்பம்
5. வாமன அவதாரம் நிகழ்ந்த நன்னாள்?
   அ) திருவோணம் ஆ) அவிட்டம் இ) உத்திராடம்

**விடைகள்**
1) ஆ, 2) இ, 3) அ, 4) ஆ, 5) அ

## பொருத்துக...

| | |
|---|---|
| 1. ஆடிப்பூரம் | - அ. திருவோணம் |
| 2. விநாயகர் | - ஆ. குறிஞ்சி |
| 3. கேரளா | - இ. தாமரை இலை |
| 4. பத்மாசனம் | - ஈ. ஆண்டாள் |
| 5. சேயோன் | - உ. சதுர்த்தி |

1. ஈ, 2. உ, 3. அ, 4. இ, 5. ஆ.



## தெரிந்து கொள்ளலாமே...

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் என்றும்
புனையாம் அணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

- பொய்கையாழ்வார்

ஆதிசேஷன் என்றும் எம்பெருமானுடனே இருந்து அவருக்கு சேவை புரிகின்றார். நாமும் இறைவனிடத்து பக்தி செலுத்தி தொண்டாற்றிட முற்படுவோம்.

## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

இறைவனின் எல்லாப் சேர்த்து பயனும் திருப்பெயரோடு பிரணவத்தைச் பெறலாம் ஓதினால்

இறைவனின் திருப்பெயரோடு பிரணவத்தைச் சேர்த்து ஓதினால் எல்லாப் பயனும் பெறலாம்.

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



## விடுகதை பகுதி...

1. அள்ள முடியும் ஆனால் கிள்ளமுடியாது.
2. காலில்லா பந்தல் காணக்கான விநோதம்.
3. கிணற்றைச் சுற்றி வெள்ளைக்கல்

1. தண்ணீர், 2. வானம், 3. பல்.



Printed by Sri P. Ramaraju, M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Published at Tirupati – 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.


ஸர்வஸித்தி ப்ரதா ஸாத்வீ ஸர்வஜ்ஞாந ப்ரதாயிநீ ।
ஸர்வதாரித்ர்ய சமநீ ஸர்வதுக்க விமோச நீ ॥

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams
Printing on 20-08-2021

ஜ்ஞாநா நந்தமயம் தேவம்
நிர்மல ஸ்ப்படிகாக்ருதிம் |
ஆதாரம் ஸர்வவித்யாநாம்
ஹயக்ரீவமுபாஸ்மஹே ||

